Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 20 செவ்வாய்க்கிழமை (05.08.2014) பக்கங்கள் 20 ஓசை –308

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## உள்நாட்டு விவகாரங்களை வெளிநாடுகளிடம் முறையிட வேண்டாம்

### கூட்டமைப்பு மீது புதுடில்லியின் கண்டனம்

(புதுடில்லி)

உள்நாட்டு விவகாரங்களை உள்நாட்டிலேயே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். அவற்றை எடுத்துக்கொண்டு சென்று வெளிநாடுகளிடம் முறையீடு செய்யும் தனது போக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியாவது கைவிட வேண்டும் என்று புதுடில்லியில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு இராஜதந்திர மொழியில் கண்டிப்புடன் உணர்த்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான தொடர்பாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் புதுடில்லிக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இந்த விடயத்தில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அதற்கான வசதிப்பாடுகளை செய்துகொடுத்தது என்று இப்போது தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான புதுடில்லியின் கோரிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செவிசாய்த்தால் மட்டுமே புதுடில்லிக்கு கூட்டமைபபின் 19 ஆம் பக்கம் பார்க்க

## அடிகாயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு


(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளத்தில் வீடொன்றில் இளைஞர் ஒருவர் தலை, வயிற்றுப் பகுதியில் காயங்களுடன் வாய், மூக்கு பகுதிகளில் இரத்தம் வெளியேறிய நிலையில் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை தமக்கு கிடைத்த தகவலின்படி அங்கு சென்று சடலத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். அந்த வீட்டில் வேலைக்காரனாகப் பணியாற்றும் கொழும்பு வத்தளையைச் சேர்ந்த எஸ்.சரவணன் (வயது - 28) என்பவரது சடலமே என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் வைரவபுளியங்குளத்தில் உள்ள மதுபான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு மது அருந்திவிட்டு சிலருடன் சண்டையிட்டார் என்றும், அதன்பின்னர் இரவு 11.00 மணியளவில் வீட்டுக்கு வந்து உறங்கினார் என்றும், நேற்றுக் காலை அவர் சடலமாகக் காணபட்டார் 19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு பிரதம செயலாளருக்கு விக்கி உத்தரவு போடமுடியாது



### அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் தீர்ப்பு



(கொழும்பு)

மாகாண பிரதம செயலாளருக்கு உத்தரவிடும் அதிகாரம் பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கே உண்டு என்றும், அவ்வதிகாரம் மாகாண முதலமைச்சருக்கு இல்லை என்றும் உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டதாக, வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸினால் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான தீர்ப்பு, உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மற்றும் நீதியரசர்களான ரோஹினி மாரசிங்க மற்றும் கே.சிறிபவன் ஆகியோரினால் நேற்று வழங்கப்பட்டது.

இதன்போது, மாகாண பிரதம செயலாளருக்கு உத்தரவிடும் அதிகாரம் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளதென தீர்ப்பளித்த நீதியரசர்கள் குழு, வடமாகாணசபையின் நடவடிக்கைகளை முறையாகக் கொண்டு செல்வதற்கு இரு தரப்பினரும் ஒற்றுமையாக சேவையாற்ற வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியது.

அத்துடன், இந்த வழக்கை தொடர்ந்து விசாரிப்பதில்லை என்றும் உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

முதலமைச்சர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான 19 ஆம் பக்கம் பார்க்க

## சடலத்தை நாய்கள் இழுத்துச் சென்றதால் அளவெட்டியில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தும்புத் தொழிற்சாலை மயானத்தில் நேற்று முன்தினம் எரியூட்டப்பட்ட சடலம் முழுமையாக எரிக்கப்படாமையால் சடலத்தின் தலைப்பாகத்தை நாய் இழுத்துவந்து வீதியில் போட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டதுடன் இது 19 ஆம் பக்கம் பார்க்க

## தேவாலயத்துக்குள் புகுந்த பிக்குகள் கூட்டத்தை குழப்பியதாக முறைப்பாடு

(கொழும்பு)

வடபகுதியில் காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்று கொழும்பில் நடத்திய கூட்டத்தை, பௌத்த பிக்குகள் சிலர் அச்சுறுத்தித் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர். நேற்று மாலை கொழும்பு மருதானையில், கத்தோலிக்க தேவாலயமொன்றில் இந்தக் கூட்டம் நடைபெற்றதாக கூட்டத்துக்கு ஏற்பாடுகளைச் செய்திருந்த அமைப்பாளர்களின் ஒருவரான அருட்தந்தை என்.சத்தியவேல் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

இன்று உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

தினமுரசு குடும்பம்



உள்ளே

தரம் 5
புலமைப்பரிசில்
பரீட்சை வினாத்தாள்

## சப்ரகமுவ பல்கலையில் பாதுகாப்பு மும்மடங்காக அதிகரிப்பு

### மாணவன் தாக்கப்பட்டதன் எதிரொலி

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வடபகுதி மாணவர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மும்மடங்காக அதிகரிக்கப்பட்டு பல்கலைக்கழக நிர்வாகமும் பொலிஸாரும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில், மாணவர்கள் விடுதிக்குள் புகுந்த முகமூடி அணிந்த சிலர், இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி, முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் என்ற மாணவனே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்.

காயமடைந்த மாணவன் தற்போது பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் கல்வி பயிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களை 19 ஆம் பக்கம் பார்க்க

## சென்னைக்குச் சென்ற கிரிக்கெட் அணி திருப்பி அனுப்பப்பட்டது கொழும்புக்கு

(சென்னை)

ஜெயலலிதா குறித்த கட்டுரையால் எழுந்த சர்ச்சை தொடர்கிறது. சென்னை சென்ற இலங்கை கிரிக்கெட் அணி அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தனியார் கிரிக்கெட் சம்மேளனம் ஒன்று ஏற்பாடு செய்த 15 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் விளையாட வந்த இலங்கை இளம் கிரிக்கெட் வீரர்கள் குழு ஒன்று, பாதுகாப்பு கவலைகளால் மீண்டும் இலங்கைக்கே திரும்ப அனுப்பப்பட்டது. 19 ஆம் பக்கம் பார்க்க

கிராமத்திலிருந்து நகரத்துக்கு வரும் நீங்களும் வாருங்கள். இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். நாளைய வாழ்க்கை முன்னேற்றமடையும். நீங்கள் 18 - 55 வயதான ஆரோக்கியமானவரா? சம்பளம் 20000/=, 38000/= இற்கும் மேல் உள்நாட்டில் சிறந்த தொழிற்சாலைகளில் ஜேம், கோடியல், டொபி, யோகட், கிளவுஸ், சவர்க்காரம், பெயிண்ட், புத்தகம், டயர், சீட், சீமெந்து, கிளாஸ், பெக்கிங், ஸ்டோர் பழுதுபார்த்தல், பிரிவுக்கு ஆண், பெண் அவசரமாகத் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும். நண்பர்கள், குழுக்களாக தம்பதியினர் ஒரே இடத்திலும் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சிங்களம் அவசியமில்லை. வருகைதரும் தினமே தொழிலை பெற்றுக்கொள்ள முடியும். அழையுங்கள் 0775964299 (C/3763)

வேலை வாய்ப்பு

# குறுந்திரைப்பட வெளியீட்டு விழா

கிங் பிளவர் ஆர்ட் கலரியினால் தயாரிக்கப்பட்ட 'நிர்க்கதியோ' எனும் குறுந் திரைப்பட வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு றெஜிஸ் இயக்கிய இத் திரைப்படத்தின் வெளியீட்டு நிகழ்வு கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு திரைப்படத்துறை ஆர்வலர்கள் அனைவரையும் வருகை தருமாறு கிங்பிளவர் ஆர்ட் கலரி நிறுவனத்தினர் அழைத்துள்ளனர். முதுமையின் ஆதரவற்ற நிலை குறித்து திறம்பட சித்தரிக்கும் 15 நிமிடக் குறுந்திரைப்படமாக நிர்க்கதியோ அமைந்துள்ளது. (90)


## அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலரால் கீழ்க் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசியப் போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக் கேள்வியாளர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் 05.08.2014 ஆம் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன், மாவட்ட உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 0212221676) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்ப மொன்றைச் சமர்ப்பித்து 05.08.2014 முதல் 25.08.2014 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாகச் செலுததிப் பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறு கைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26.08.2014 ஆம் திகதியன்று பி.ப. 12.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக் கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிக ளின் முன்னிலையில் 26.08.2014 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப்பொறுப்பு 120 நாட் கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப் பீட்டுத் தொகை (மில் லியன்) | ஒப்ப ந்த காலம் (மாதம்) | தேவை யான தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக் கப்ப டாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/ DDMCU /DMRP/ 2014/02 | பருத்தித்துறை சின்னத் தோட்டம் பகுதியில் வடி காலமமைப்பு நிர்மா ணித்தல். | 5.72 | 06 | C7 | 1000.00 | 57,200.00 |
| JF/GA/ DDMCU /DMRP/ 2014/04 | வேலணை சின்னமடு மேற்குப் பகுதியில் வடி காலமைப்பு நிர்மாணித் தல். | 06 | 8.744 | C7 | 87,500.00 | 1000.00 |
| JF/GA/ DDMCU /DMRP/ 2014/07 | ஊர்காவற்றுறை நாரந் தனைப் பகுதியில் உவர் நீர் உட்புகுதலில் இரு ந்து பாதுகாப்பதற்கான அணைப்பணை அமைத் தல். | 3.02 | 06 | C8 | 34,000.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் /
மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/3762)


# வாழ்வாதார உதவிகளை மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்துவதில்லை

## யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கவலை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்க ளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கப்படும் உதவிகளை சிறந்த முறையில் அம்மக்கள் பயன்ப டுத்துவதில்லை என யாழ்ப்பாணப் பல் கலைக்கழக விரிவுரையாளர் க.கந்தசாமி தெரிவித்தார்.

தென்மராட்சி நலச்சேவைகள் சங்கத் தின் பொதுக்கூட்டம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரை யாற்றுகையிலேயே விரிவுரையாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

உதவித் திட்டங்களை வழங்குவதற்கு சரியான பயனாளிகளை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை காணப்படுகின் றது. இதனால், உதவித் திட்டங்களைப் பொதுவாகப் பயன்படக்கூடியவாறு கல்வி அபிவிருத்தியில் பயன்படுத்துவது தொடர் பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் மீள்குடி யேற்றம் இடம்பெற்றபோது, தென்மரா ட்சி நலச்சேவைகள் சங்கம் உருவாக்கப் பட்டு, மீள்குடியேறும் மக்களின் வாழ்வா தாரத்தினை வளப்படுத்தும் நோக்கில் வாழ்வாதார உதவிகளைப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்களிடம் இரு ந்து பெற்று வழங்கியது.

இந்நிலையில், மேற்படி சங்கத்தினால் இதுவரை காலமும் வாழ்வாதார உதவி கள் வழங்கப்பட்டு வந்த நிலையில், அதில் மாற்றம் கொண்டு வரப்பட்டு இனிவருங் காலங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்தவகையில், தென்மராட்சிப் பிரதே சத்தில் மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் வகையில் தொழில் நுட்ப கூடம் ஒன்று இச்சங்கத்தினால் அமைக்கப்படவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவ தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டத்தின் முடிவில் நடப்பாண்டு நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது டன், அதன் தலைவராகத் தொடர்ந்தும் க.கந்தசாமி தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன், இனிவரும் காலத்தில் தென்மராட்சியில் சகல பிரதேசங்களை யும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

# கோயில் உடைத்து திருட்டு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் உப்புக்குளத் தில் அமைந்துள்ள திருவானைக்கூடம் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோவி லின் உட்புறக் கதவுகள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரினால் உடைக் கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் அக்கோ வில் பிரதம குரு நேற்றுக் காலை முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றுக்காலை கோவிலுக்குச் சென்ற போது, கோவிலின் உட்புறக் கதவு உடை க்கப்பட்டுக் காணப்பட்டதுடன், கோவி லிலிருந்த அலுமாரியும் உடைக்கப்பட்டு அம்மனின் பட்டாடைகள் கீழே கொட் டப்பட்டுக் கிடந்ததாக இக்கோவில் பிர தம குரு தெரிவித்தார்.

மேலும், அலுமாரியில் வைக்கப்பட்டி ருந்த 50 ஆயிரம் ரூபா பணமும் கள வாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், மோப்ப நாய்கள் சகிதம் மன்னார் பொலிஸார் குறித்த கோவிலுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்

## வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

மாணவர்களைக் கல்வியுடன் இணைந்த வகையில் இணைப் பாடவிதான செயற்படுகளிலும் ஈடுபடுத்த வேண்டும் என்று, வடமாகாண அதிபர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் எஸ். சிவநேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண பாடசாலை களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக வடமாகாண அதிபர் சங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ் ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற் றது. இதன்போதே மேற்படி தீர் மானம் எடுக்கப்பட்டதாக சிவ னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில், வடமாகா ணப் பாடசாலைகளை அபிவி ருத்தி செய்வதற்கான கருத்துக் கள் பாடசாலை அதிபர்களினால் முன்வைக்கப் பட்டன.

மேலும், அதிபர்கள், பணிப்பாளர்களுக்கு இடையேயான புரிந்துணர்வையும், நட்பையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுப் பதன் ஊடாக பாடசாலை முகாமைத்துவத்தினை வலுப்படுத்த முடியும் என்ற கருத்தும் முன்வைக் கப்பட்டது.

பாடசாலைகளில் அதிகளவு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் அதிபர்கள், ஆசிரியர் கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வு காணப் பட வேண்டும், அதிபர்களின் நிர்வாக நிதி, முகா மைத்துவச் செயற்பாடுகளை வலுப்படுத்தி அத னூடாக பாடசாலைக் கல்வியை வலுப்படுத்துதல், அதிபர்கள் தமக்கிடையிலான தொடர்புகளினை வலுப்படுத்துவதுடன், அனுபவங்களையும் பகிர் ந்து கொள்வதன் மூலம் பாடசாலைகளை வலுப் படுத்தல் உள்ளிட்ட விடயங்களும் கலந்துரை யாடப்பட்டன.

வடமாகாணப் பாடசாலைகளை ஒன்றிணைத்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கல்வி மாநாடொ ன்றை நடத்துவதினூடாக, பாடசாலைக் கல்வியில் காணப்படும் தேக்க நிலைக்கு பொருத்தமான தீர்வுகளைக் காண்பது என்ற தீர்மானங்களுடன், மாணவர்களை கல்வியுடன் இணைந்த வகையில் இணைப்பாடவிதானச் செயற்படுகளில் ஈடுபடுத்த வேண்டும் என்ற தீர்மானமும் அதிபர்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)


## 18 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

கடந்த மாதம் 21 ஆம் திகதி அனலைதீவுக் கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் பிடிக் கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 18 இந்திய மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (பா)

# "இந்து இளைஞன் பவளவிழா" மலர் பண்பாட்டம்சங்களை பிரதிபலிக்கிறது

## பேராசிரியர் வேல்நம்பி தெரிவிப்பு



(யாழ்.நிருபர்)

தமக்குக் கல்வி போதித்த ஆசிரியர்களைப் போற்றுகின்ற பண்பாட்டைப் பேணும் கட்டுரைகளைத் தாங்கி "இந்து இளைஞன் பவள விழா" மலர் வெளிவந்துள்ளமை பாராட்டுக்குரியதாக அமைகின்றது என யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்து இளைஞன் பவள விழா மலர் வெளியீட்டு விழா கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் ஆய்வுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அண்மைக்கால வரலாற்று ஆவணமாக இந்து இளைஞன் பவள விழா மலர் அமைந்துள்ளது. பாடசாலை முகப்பை அழகான அட்டைப் படமாகக் கொண்டு இரு நூற்றுப் பதினேழு பக்கங்களில் அறுபது வண்ணப் புகைப்படங்களையும் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் படைப்புக்களையும் தாங்கி இம்மலர் வெளிவந்துள்ளது.

2013 கலைப்பிரிவு மாணவன் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ எழுதியுள்ள "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வியக்க வைக்கும் விவாதத்துறைப் பதிவுகள்" என்ற கட்டுரை இம்மலருக்கு ஒரு மணி மகுடமாக அமைந்துள்ளது.

தமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அவர்களைப் போற்றும் வகையில் பல்வேறு ஆசிரியர்கள் பற்றிய கட்டுரைகளும் இந்த மலரில் இடம் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும் என்றார். (10)

# கருத்தரங்கு

அரச தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் கருத்தரங்கு இம்மாதம் 11 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அரசாங்க தகவல் திணைக்களம் யாழ்.மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடாத்தும் இக்கருந்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், களனி பல்கலைக்கழக பொதுசனத் தொடர்புப் பிரிவின் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல, கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத் தொடர்பாடல் கற்கை நெறிப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரகுராம் உட்பட தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பலர் இதில் சிறிப்புரை நிகழ்த்தவுள்ளனர்.



**வேதநாயகம் தபேந்திரனின் 'யாழ்ப்பாண நினைவுகள்' நூல் அறிமுகவிழா நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு அல்வாய் சிறீலங்கா வித்தியாலயத்தில் குப்பிளான் ஐ. சண்முகன் தலைமையில் இடம்பெற்ற போது... (63)**

# கொடியேற்றம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் பூசை, வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களின் வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. திருவிழாக்காலங்களில் அடியார்கள் பூசைக்கு வேண்டிய பொருட்களை வழங்கி அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர். (85)

# வீதி புனரமைப்பு இன்மையால் சிரமத்தில் போக்குவரத்து

(சுன்னாகம்)

மானிப்பாய் கிறீன் வைத்திய சாலையின் பின் வீதி மிகமோசமாக தேசமடைந்து குண்றும் குழியுமாக மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் பிரதான வீதியையும் மருதனார் மடம் - மானிப்பாய் வீதியையும் இணைக்கும் குறுந்தூரம் கொண்ட வீதியாக இது காணப்படுவதுடன் இவ் வீதியால் கனரக வாகனங்களின் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்பட்டாலும் வீதிப்புனரமைக்கப்படாமையால் மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

# ஊரிலும் கடும் வரட்சி... மாந்தர் உள்ளங்களிலும் கூட கோடையின் வரட்சி...




கோடையென்றால் இப்பிடியொரு கோடையை என்ரை வாழ்நாளில நான் கண்டதேயில்லை.

வரட்சியெண்டாலும் இப்பிடியொரு வரட்சியைப் பார்த்ததில்லை.

நீர்ப்பிடிப்பில்லாமல் தென்னைகளெல்லாம் வட்டுமுறிஞ்சு விழுகுதுகள்.

முற்றத்தில நிக்கிற பூங்கன்டுகள் எல்லாம் வாடிச்சுருண்டு பட்டுக்கொண்டு போகுதுகள்.

றோட்டில ஊத்தியிருக்கிற தார் உருகிக் காலோட வருகுது. சைக்கிளோடினால், ரயரோட ஒட்டுது.

வெக்கை தாங்கேலாமல் நாய்கள் ஒடித்திரியுது.

மரங்கள் எல்லாம் வாடிச் சோர்ந்து போகுது.

ஆசையோட நட்டுப் பராமரிச்சு, வளர்த்த மாதுளை, தோடை, எலுமிச்சையெல்லாம் இண்டைக்கோ நாளைக்கோ எண்ட கணக்கில படுகிறதா நிக்கிறதா எண்டு குழம்பிக்கொண்டிருக்குதுகள்.

ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் இல்லை. தரவையில எந்த நேரமும் நெருப்புப் பிடிக்கலாம் போல இருக்கு.

தண்ணியில்லாமல் மாடுகள் சாகுது.

கிணற்றில தண்ணியில்லாமல், மணல் குவியுது.

இது இயற்கையின்ரை வஞ்சனை. இதுக்கு ஆர்தான் என்ன செய்ய முடியும்? எண்டு நீங்கள் கேட்கலாம்.

'நல்லார் ஒருவர் பொருட்டு பெய்யுமாம் பெருமழை...' எண்டு எங்கட முன்னோர் சொல்லுவினம்.

இப்ப மழை பொய்த்துப்போனதுக்கு நல்லவர்களும் நாங்களும் பொய்த்ததுதான் காரணமோ....

நாடு பிழைத்தால் நாலும் பிழைக்கும் எண்டு சொல்லுவினம்.

நாட்டைப் பிழையாக எல்லோருந்தான் ஆக்கி வைச்சிருக்கினம்.

இதில எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி எண்ட பேதமெல்லாம் கிடையாது.

ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் நடத்தி, இனவாதத்தை வளர்த்து, அந்த வாதநோயில நாடே படுத்த படுக்கைக்கு வந்திருக்கு.

எண்டாலும் ஆரும் இதை உணருகிறதாயில்லை.

இனவாதத்தை ஒவ்வொருத்தரும் ஊத்தி ஊத்திக் கோப்பி குடிக்கிறமாதிரிக் குடிக்கினம்.

சிலபேர் கள்ளுக் குடிக்கிறமாதிரி போதை ஏற ஏறக் குடிச்சுக்கொண்டிருக்கினம்.

இன்னும் சிலபேர், பியரடிக்கிற மாதிரித் தலைகால் தெரியாமல் குடிக்கினம்.

இப்பிடியெல்லாம் அளவு கணக்கில்லாமல் இனவாதத்தைக் கரைச்சுக் குடிக்கக் குடிக்க, போதையேறி, அவனவன் தலைகால் புரியாமல் ஆடுகிறான்.

இப்ப நாட்டில சாராயக்கடையை விட இனவாதக் கடைகள்தான் எல்லா இடத்திலயும் முளைச்சிருக்கு.

சாதிக்கொரு கட்சி எண்டு இந்தியாவில இருக்கிறதைப்போல, இஞ்ச இலங்கையில இனத்துக்கு நாலு கட்சி எண்டு முளைச்சிருக்கு.

இது நல்லதுக்கில்லை. நல்லதுக்கான சகுனமும் இல்லை.

இப்ப வரட்சி போட்டு உலைக்குது எண்டால், இந்த வரட்சியை எப்பிடிச் சமாளிக்கலாம் எண்டதைப்பற்றிச் சிந்திக்கிறதுக்கோ, இதைப்பற்றிக் கூடிக் கதைக்கிறதுக்கோ கூட நம்மட ஆக்களுக்கிடையில ஒற்றுமையில்லை.

ஆளாளுக்கு அரிவாளோட நிக்கிற காட்சிதான் கண்ணுக்குள்ள வருகுது.

இப்பிடி அரிவாளைத் தூக்குகிற காலம் ஒண்டும் தூரத்தில இல்லை.

அது நம்மட காலடியுக்குள்ளதான் இப்ப இருக்கு. துவக்குத் தூக்கிப் பீரங்கி அடிச்சதெல்லாம் போய்... இனிக் கத்தியும் அரிவாளும் தூக்கிற காலம் எண்டு ஆகியிருக்கு.

இப்பவே ஆஸ்பத்திரிகளிலயும் பொலிஸ் நிலையங்களிலயும் அரிவாள் கேஸ்களை நீங்கள் பாத்திருப்பியள்.

சனங்கள் பஞ்சத்திலயும் பசியிலயும் வரட்சியிலயும் தவிச்சுக்கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில இப்படி அநியாயம் நடக்குது எண்டால்...,

நாடு சீரழிஞ்சு கொண்டிருக்கு எண்டுதானே அர்த்தம்.

இதை நல்ல வழிக்குக் கொண்டு வாறது ஆற்றை பொறுப்பு. அதாவது இந்த நாட்டில நல்ல விசயங்கள் நடக்கிறதுக்கு – அந்தப் பெரிய பூனைக்கு மணியைக் கட்டிறது ஆர்?

இனவாதத்தைக் கைவிட்டு இன ஐக்கியத்தைப் பேசி, அதை நடைமுறைக்குக் கொண்டு வந்து நல்ல காரியங்களைத் தொடங்கலாம் எண்டால்....

அதுக்குத் துரோகிப்பட்டம். சமூகப் புறக்கணிப்பு.

இனத்தூய்மைப் பேச்சுகள்....

இப்பிடியிருந்தால் நாட்டில நெருப்பு றோட்டில மட்டுமல்ல வயிற்றிலயும்தான் மூளும்.

வரட்சி ஊரில மட்டுமில்ல உள்ளத்திலயும்தான் காயும்.

நல்லவை செய்து பெரியோர்களாகினால்தான் பெய்யும் பெருமழை. இல்லையெண்டால் சிறுதூறலும் இல்லை எண்டதுதான் உண்மை.

நல்லார் ஒருவரும் இல்லையென்றால் பெய்யுமா பெருமழை...?

ஒரு முள் குத்திய அனுபவம் காடளவு எச்சரிக்கைக்கு சமம்.
- வோயாஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live:com
Online : www.emurasu.com

## பகுத்துண்டு பல்லுயிரோம்புதல்!

சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள், பூமிக் கோளத்தில் ஏற்படும் சீரழிவுகளை 'பெரும் சீரழிவுகள் 5' எனப் பட்டியலிடுகிறார்கள். இதில், 3வது இடத்தைப் பெற்றுள்ளது பல்லுயிர் பெருக்க குறைபாடு. இதுதான் இவ்வுலகில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்கிறார்கள்.

முன்னர் நாம் அன்றாடம் பார்த்துவந்த பல சிற்றுயிர்கள் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டன. அதிக விளைச்சலுக்காக ஆய்வு கூடத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட உணவு, தானிய வகைகளும், பல்லுயிர் அழிவுக்குக் காரணமாகி இருக்கிறது.

இன்றைய தக்காளிச் செடிகள் மிக பிரம்மாண்டமாய் வளர்கின்ற அதேவேளை, நாம் நமது சிறிய பருவத்தில் பார்த்த வண்ணத்துப் பூச்சிகளை இப்போ பார்க்க முடிவதில்லை.

குருவிகள் கூடுகட்ட இப்போதெல்லாம் வைக்கோல்களே கிடைப்பதில்லை. கூரை வேய்ந்த வீடுகளும் வழக்கொழிகின்றன. முன்பு வீட்டின் வாசலில் இடது மூலையில் ஒரு சிறிய பானையை கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். குருவிகளின் வீடு அது.

அதற்கெல்லாம் இன்று நமக்கு நேரமில்லை. செல்போன் கோபுரங்க்ளால் சிட்டுக் குருவிகள் அழிந்துவிடவே உதவி வருகிறோம். கிராமங்களிலும் இப்போது கொங்கிரீட் வீடுகளே. வீட்டுத்திட்டங்களாகவும் கல்வீடுகளே.

அறுவடை செய்யப்பட்ட தானியங்கள் சணல் சாக்குகளிலும், கூடைகளிலும் நிரப்பப்பட்டு மாட்டு வண்டிகளில் ஏற்றி வரப்படும். வழியில் சிந்தும் தானியங்களை சிறு பறவையினங்கள் உண்டு வாழ்ந்தன. இன்று இயந்திர அறுவடை ஒரு துளி தானியத்தைக் கூட சிந்த விடுவதில்லை.

இந்த முன்னேற்றமடைந்த அறிவியலின் சூழல் பறவைகளுக்கு உணவு நெருக்கடியைக் கொண்டுவந்து அவைகளை நம்மிடமிருந்து அப்புறப்படுத்திவிட்டது.

குளவி கூடுகட்டினால் மங்கலமான நிகழ்வு வீட்டில் நடக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. அதனால் வீட்டின் மூலைகளில் குளவிகள் சுதந்திரமாய் கூடுகட்டி உயிர் வாழ்ந்தன.

இன்றோ வீட்டில் பூச்சிகள், பல்லிகள் வரக்கூடாது என்பதற்காக சுவரில் பெயின்ற் பூசும்போது இரசாயன மருந்துகளை கலந்து பூசுகின்றோம். அம்மருந்துகளின் உபயத்தால் ஒரு சிறு பூச்சி கூட வீட்டிற்குள் நுழைவதில்லை.

அப்படியே குளவிகள் வந்தாலும் அதன் கூட்டை அசிங்கம் என்று இடித்து விடுகிறோம். 'கூட்டைக் கலைத்தாயோ கொலை பாவம் செய்தாயோ' என்ற பழமொழியெல்லாம் இன்று காலாவதியாகிப் போய்விட்டன.

இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையிலிருந்து நம்மை நாமே விலக்கிக் கொண்டுவிட்டோம். அந்த இரசாயன மருந்துகள் தம் கோரக் கரங்களால் நம்மையும் அழிக்க காத்துக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்து விடுகிறோம்.

இந்த உயிர் சூழல் பாதிப்பால் ஓசோன் மாசடைதல், அமில மழை, சத்துக் குறைவான நீரை மேகங்கள் மழையாகப் பொழிதல் போன்றவை ஏற்படுவதாகச் சொல்கின்றனர்.

பெருமரங்கள் வளராமல் இருப்பது அல்லது அதன் வளர்ச்சி குன்றுதல், பறவைகள் இடப்பெயர்ச்சி, வண்ணத்துப் பூச்சிகள் இனப்பெருக்க குறைவு, குளத்தில் மீன்கள் இறப்பது, அதன் பெருக்கம் குறைதல், மூலிகைச் செடிகள் முற்றாக அழிதல் என்பனவெல்லாம் இதன் தாக்கம்தான்.

கோடை வறட்சியின் கொடுமை வரவர அதிகரித்து வருவதை நாம் உணர்கிறோமே, அதுவும் இந்த நம் வாழ்க்கைமுறையின் விளைவுதான். ஒவ்வொரு மனிதரும், பல்லுயிர்ச் சூழலின் தேவையைப் புரிந்துகொண்டு இப்பூவுலகையும், அதன்மூலம் தன்னையும் பாதுகாக்க விழிப்படைய வேண்டும். - ஆசிரியர்.

# இருள் சூழ்ந்த நாட்டில் ஒளியை ஏற்றியவர் ஜனாதிபதி

## மகளிர் விவகார அமைச்சர் புகழாரம்

(கொழும்பு)

மூன்று தசாப்தங்களாக யுத்தத்தால் இருள் சூழ்ந்த நாட்டில் ஒளியை ஏற்றியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

நாட்டை பாதுகாக்கும் நீல அலை வேலைத்திட்டத்தின் கீழ் மதவாச்சி மைத்திரிபால சேனநாயக்க தேசிய பாடசாலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு அன்பு செலுத்தும் கட்சிகள் அன்றும் இன்றும் ஜனாதிபதிக்கு தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. ஆனால் நாட்டுக்கு அநீதி விளைவிக்கும் கட்சிகள் அன்றும் இன்றும் நாட்டை காட்டிக்கொடுக்க முனைகின்றன.

1951 ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதநதிரக் கட்சிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்ல தலைமைத்துவத்தை வழங்கி வருகிறார். ஜனாதிபதியைத் தவிர இக்கட்சியை பாதுகாக்க வேறு தலைவர்கள் தேவையில்லை என்றார்.

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மற்றும் ரம்பேவை, மதவாச்சி, கெப்பிற்றிக்கொலாவை, பதவிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் சங்க உறுப்பினர்கள் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் பதவியை துறந்து ஹக்கீமை சங்கடப்படுத்த மாட்டேன்

## அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவிப்பு

(கொழும்பு)

எனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சங்கடத்துக்கு உள்ளாக்க மாட்டேன் என அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு கரையோர மாவட்டம் அல்ல என ஊக்குவிப்பு உற்பத்தித் திறன் விருத்தி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

அமைச்சர் பசீர் சேகுதாவூத் எழுதிய 'சோர்விலாச் சொல்' நூல் வெளியீட்டு விழா கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரையோர மாவட்டம் என்பது அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினையாகும். கரையோர மாவட்டம் முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாகாது.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்திலிருந்து வெளியேறி. எதிர்க்கட்சியில் இருக்க வேண்டும். இதற்காக எனது அமைச்சுப் பதவியையும் இராஜினாமாச் செய்ய ஆயத்தமாக உள்ளேன்.

நான் ஏற்கனவே எனது பிரதியமைச்சுப் [illegible]விகளை மூன்று தடவைகள் இராஜினாமாச் செய்துள்ளேன். ஆனால், தற்போது எனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்து தலைவர் ரவூப் ஹக்கீமை சங்கடத்துக்குள் கொண்டுவர விரும்பவில்லை.

எனது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எனக்கு மூன்று முறை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தந்துள்ளார்.

இவற்றையெல்லாம் நான் மறந்து விடவில்லை. தற்போதைய சூழ்நிலையில் அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி அரசியலை நடத்திப் பார்க்க வேண்டும். காலம் கடத்துவதை விட இப்போதே இதைச் செய்வதையே நான் விரும்புகின்றேன் என்றார்.

# பெண் வர்த்தக தொழிலாளர்களுக்கு முதலாவது பொதுநலவாய விருது

2013 ஆம் ஆண்டுக்கான முதலாவது பொதுநலவாய பெண் வர்த்தக தொழிலாளர்களுக்கான விருது வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு கிங்ஸ்பெறி ஹோட்டலில் நடைபெற்றது.

இவ்விருது வழங்கும் நிகழ்வினை பெண்களுக்கான கைத்தொழில் மற்றும் வணிகர் கழகம் பொதுநலவாய வர்த்தக கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

உகண்டா நாட்டுப்பிரதிநிதியும் வர்த்தக அமைப்பின் உரிமையாளருமான ஜுலியன் ஓமாலா வெற்றி விருதுக்காக தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான விருதினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வழங்கிக் கௌரவித்துள்ளார்.

மேலும் 2014 ஆம் ஆண்டிற்கான தங்கப்பதக்கத்தினை ஜோலண்டா கலெக்ஷன் உரிமையாளர் ஜோலண்டா அலுவிகே பெற்றுக்கொண்டார்.

சிலோன் நியூஸ்பேப்பர் லிமிற்றட் ஊடக அனுசரணையுடனும் தேசிய சேமிப்பு வங்கியின் பிரதான அனுசரணையுடனும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜ.எல்.பீரிஸ், பெண்களுக்கான கைத்தொழில் மற்றும் வணிகக் கழகத்தின் தலைவர் கலாநிதி சரசிரி டுபேஷ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் ஒக்ரோபர் மாதம் முதலீட்டுச் சந்தை மாநாடு

முதலீட்டுச் சந்தைகளுக்கான மாநாடொன்று கொழும்பில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி கொழும்பு சினமொன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை குழுவுடன் இணைந்து கொழும்பு பரிவர்த்தனை நிலையம் இம்மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாநாட்டின் பிரதான குறிக்கோளாக இலங்கை முதலீட்டாளர்களின் முதலீட்டு வியாபாரத் திறனை சர்வதேச நிதி மேலாளர்கள், நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் உயர் நிகர மதிப்பு முதலீட்டாளர்களுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இதனூடாக சர்வதேச ரீதியில் பல வகையான பார்வையாளர்களை கவரமுடிவதுடன், மிகச் சிறந்த வியாபார வர்த்தக சந்தர்ப்பத்தினையும் வழங்கி முதலீட்டு சந்தையின் நுணுக்கங்கள் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ள முடியும். சர்வதேச ரீதியில் இலங்கையின் வர்த்தக பொருளாதார வளர்ச்சியை ஒன்றிணைக்கக்கூடிய இடமாக இந்த வர்த்தக முதலீட்டுச்சந்தை அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

முதலீட்டாளர்களுக்கான கருத்துக்களத்தில், சர்வதேச ரீதியில் பிரபலமடைந்த வர்த்தக முதலீட்டாளர்கள் தமது கருத்துக்களை, புதிய எண்ணங்களை இலங்கை நாட்டு அரச பிரதிநிதிகள், கட்டுப்பாட்டாளர்கள், வழங்குநர்கள், சந்தைக்கான இடைத்தரகர்களுடன் பரிமாறிக் கொள்ள முடியும். மாநாட்டுக்கு முன்னைய நாட்களில் பார்வையாளர்கள், பங்கேற்பாளர்கள் என அனைவரும் கடலால் சூழப்பட்ட அழகிய இயற்கை காட்சிகளுடன் கூடிய இலங்கையை சுற்றி பார்வையிடுவதற்கென சகல விதமான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் இடம்பெறவுள்ள இம்மாநாட்டின் மூலம் அனைத்து நாடுகளுடனுமான பரஸ்பர நன்மையினை பெற்றுக்கொள்ளும் விதமாக அனைத்து வெளிநாட்டு முதலீட்டாளர்களையும், அரச தனியார் நிறுவன தலைவர்களையும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்துள்ளது.

# தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சிகளின் போக்கு

ராஜபக்ஷ நிருவாகம் பிரதான எதிர்க்கட்சியை தவறான வழியில் திருப்பி மற்றும் குழப்பமடையச் செய்து தேர்தலில் அதனை மரணத்தின் முனைக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்றால் அதற்காக அது அபூர்வமாக எதனையும் செய்ய வேண்டியதில்லை ஏனென்றால் அதற்கான யாவற்றையும் எதிர்க்கட்சி தானே செய்து கொண்டுள்ளது.

முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளராக உள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிராமப்புற பின்பலம் எதுவும் கிடையாது. மேர்வின் டீ சில்வா எழுதியிருப்பது "அலரி மாளிகைக்கான பாதை வயல்களினூடாகவே செல்லுகிறது" என்று.

இதற்கிடையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் ஒரு ஒற்றை விடயத்தை காரணமாக்கி பொதுவான எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவரை கொண்டுவரும் திட்டமும் உள்ளது.

பொதுவான எதிர்க்கட்சி வேட்பாளர் என்பது ஒரு நல்ல யோசனைதான், ஆனால் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பது - அதன் கட்டமைப்பு சீர்திருத்தத்தை எதிர்க்கும் 17ஆவது திருத்தத்தை மீள அறிமுகப்படுத்துவது - என்கிற மேடையில் உள்ள ஒற்றை விடயம் தற்போது சிங்கள பௌத்த வாக்காளர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமப் புறங்களில் முன்னெடுத்துச் செல்லப்படும் பிரசாரம், பொது வேட்பாளர் என்பதின் கீழ் சரிவடையக் கூடும்.

அது வெளிப்படுத்துவது அத்தகைய வாக்காளர்கள் மத்தியில் ஏதாவது அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடிய ஐ.தே.க.வின் முன்னணி வரிசையை சேர்ந்த எவரும் புதிய நகரசபை மண்பத்தில் நடந்த சமீபத்தைய எதிர்க்கட்சி ஒன்றுகூடலில் முன் வரிசையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

எதிர்க்கட்சி நம்புவதற்கு சிறப்பானது என்னவென்றால் ஊவாவில் ஏற்படப் போகும் தோல்வி தவிர்க்க முடியாதது, என்றாலும் உடனடியாக நடக்கவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் அதிர்ச்சி ஏற்படுத்தும் விடயமாக ரணிலை பதவியிழக்கச் செய்து அவருக்குப் பதில் கரு - சஜீத் அல்லது சஜீத் - கரு சீட்டினை மாற்றீடு செய்வதுதான். அப்படி நடந்தால் என்னால் எனது மூச்சை அடக்க முடியாமல் போகும்.

அடுத்த தெரிவு, கரு வின் வேட்புமனுக்கு சரத் பொன்சேகா மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் பின்துணை வழங்குவது. அதேவேளை அந்த பந்தய ஓட்டம் மூன்று வழிகளில் இருக்கும் - ஐ.தே.க.வின் உத்தியோக பூர்வ வேட்பாளர் ரணில், பிளவுபட்ட ஐ.தே.க. - ஸ்ரீ.ல.சுக வேட்பாளர் கரு மற்றும் ஜே.வி.பி.என்பனவற்றுக்கு மத்தியில். இதனால் தற்பொழுது பதவியில் உள்ளவரது வீட்டில் ஒரே கேளிக்கையும் கும்மாளமுமாக இருக்கும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெறப்போகிறார் - மற்றும் அது மோசடி வழியினால் அல்ல. இப்போதும் அவர் வீரனாகத்தான் தோற்றமளிக்கிறார். என்ன காரணத்தால் ரி.என்.ஏ வடக்கு நாடாளுமன்றத் தேர்தல்கள் மற்றும் மாகாணசபை தேர்தல்களில் வெற்றி பெறுவது எப்படி நிச்சயமாக இருந்ததோ கிட்டத்தட்ட அதே காரணங்களினால் மகிந்தவும் வெற்றி பெறப் போகிறார்.

இந்தச் சூழ்நிலை இருக்கும் வரை அந்த உண்மை நீடிக்கும். அதாவது பிரதான எதிராளி வாக்காளர்களிடையே தற்போது நிலவும் கூட்டு அடையாளம் மற்றும் போர் நினைவுகள் என்பனவற்றை மீண்டும் கிளறுவது.

தவிரவும் வேறும் சில காரணங்களுக்காகவும் மகிந்த வெற்றி பெறப் போகிறார். பொருளாதாரம் அளவுக்கு அதிகமாகவோ சீராகவோ இல்லையென்றாலும் அது இன்னும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி வர்த்தகத்துக்கு நல்ல



**என்ன காரணத்தால் ரி.என்.ஏ வடக்கு நாடாளுமன்றத் தேர்தல்கள் மற்றும் மாகாணசபை தேர்தல்களில் வெற்றி பெறுவது எப்படி நிச்சயமாக இருந்ததோ கிட்டத்தட்ட அதே காரணங்களினால் மகிந்தவும் வெற்றி பெறுகிறார் – பெறப் போகிறார். இந்தச் சூழ்நிலை இருக்கும் வரை அந்த உண்மை நிடிக்கும். அதாவது பிரதான எதிராளி வாக்காளர்களிடையே தற்போது நிலவும் கூட்டு அடையாளம் மற்றும் போர் நினைவுகள் என்பனவற்றை மீண்டும் கிளறுவது.**

**தயான் ஜயதிலகா கட்டுரையிலிருந்து**

வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது அதன் காரணமாக மிதமான அளவில் வேலை வாய்ப்பும் வருமானமும் பெருகியுள்ளன.

ராஜபக்ஷக்கள் அவர்களது சமூக ஆதரவு அடித்தளத்தை அதிகரித்துக் கொண்டே போகிறார்கள் அதே நேரம் ஐ.தே.க. தனது சொந்த ஆதரவு தளத்தை இழந்து கொண்டே போகிறது.

"நீண்ட கால கரும நெருக்கடி" என கிராம்சே அழைப்பதை போன்ற நிலையில் ஐ.தே.க. உள்ளது, அதன்படி ஒரு அரசியல் கட்சி பாரம்பரியமாக அது அடைந்து வந்த சமுதாய ஆதரவு படிநிலையை இழக்கிறதை இந்த கரும நெருக்கடி அறிவுறுத்துகிறது.

அதேவேளை ஸ்ரீ.ல.சு.க சந்திரிகா குமாரதுங்காவின் கீழ் இருந்ததை காட்டிலும் மகிந்த ராஜபக்ஷவின் கீழ் புதிய முத்திரையுடன் மீள் மெருகூட்டப்பட்டு வருகிறது - என்ன, ஸ்ரீ.ல.சு.க வில் மங்கள சமரவீர விட்டுச்சென்ற நகரமயமாக்கல் மற்றும் நவீன மயமாக்கலை கோத்தாபயவும் மற்றும் நாமலும் திறமையாக பின்பற்றி வருகிறார்கள்.

உண்மையான கேள்வி என்னவென்றால் ஜனாதிபதித் தேர்தலினால் மற்றும் அந்த தேர்தலுக்குப் பின் என்ன நடக்கும் என்பதுதான். எதிர்க்கட்சியினரின் சுத்த அறிவுகெட்ட நடவடிக்கைகளால் மகிந்த மிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவாரானால், ஒன்றில் ஆளும் குடும்ப விசுவாசிகளுக்கு வேட்பாளர் நியமனங்களை அள்ளி வழங்கி ஒரு 'திடீர் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்லலாம், அல்லது அதற்குப் பதிலாக ஜே.ஆர். ஜெயவர்தனாவை போன்ற பொது வாக்கெடுப்பு என்கிற அழுத்தத்தை பிரயோகிக்கலாம்.

எதிர்க்கட்சியில் இரண்டு போக்குகள் காணப்படுகின்றன, ஒன்று தொட்டும் தொடாமலும் ஒன்றுடன் ஒன்று சேருவது மற்றது குறுக்கிடுவது, இது கடந்த பல நாட்களாக இரண்டு முக்கிய நிகழ்வுகளில் நடந்துள்ளது. ஒன்று புதிய நகரமண்டபத்தில் (வண. சோபித்தவால் கூட்டப்பட்டது) ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக ஒன்றுகூடியது.

மற்றது விகாரமாதேவி பூங்காவில் உள்ள திறந்தவெளி அரங்கில் ஜே.வி.பி.யினரது இளைஞர் அணி, சோசலிச இளைஞர் முன்னணி மற்றும் பல சிவில் சமூக அமைப்புகளினால் ஏற்பாடு செய்யயப்பட்ட நிகழ்ச்சி, இது இன மற்றும் மத வெறிகளுக்கு எதிராக நடத்தப்பட்டது.

முதலாவது கூட்டம் அதிகம் பிரதானமானவர்களைக் கொண்டது, இரண்டாவது இடதுசாரி வழி நடத்தலின் கீழ் நடத்தப்பட்டது. முதலாவது ஒன்று சேர்வில் கலந்து கொண்டவர்கள் பிரதானமாகவும் ஓய்வு பெறும் வயதினராக இருந்தனர், இரண்டாவது அளவுக்கு அதிகமான இளைஞர்களைக் அடிப்படையாகக் கொண்டிருந்தது. முதலாவது அரசியல் குழப்பத்தினை வெளிக்காட்டியது, இரண்டாவது ஆய்வுகள் மற்றும் யோசனைகளின் தெளிவையும் மற்றும் இணக்கத்தையும் வெளிப்படுத்தியது.

முதலாவது கூட்டம் ஜனாதிபதித்துவம் மற்றும் பிரதம மந்திரித்துவம் என்பனவற்றின் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் ஆவிகளினால் நிறைந்திருந்த அதேவேளை இரண்டாவது வருங்கால தலைவர்களாக வருவதற்கு சாத்தியம் உள்ளவர்களால் நிறைந்திருந்தது. முதலாவது கூட்டம் கடைசி வாய்ப்புக்காக காத்திருப்பவர்களின் ஒன்றுகூடலாக இருந்த அதேவேளை இரண்டாவது ஒரு நீண்ட அணிவகுப்புக்கான மக்கள் கூட்டமாக இருந்தது.

இனப்பாகுபாட்டுக்கு எதிரான கூட்டத்தில் அனுர குமார திசாநாயக்கா மிகவும் கடுமையாக தாக்கும் நம்பிக்கையான விமர்சனத்தை வெளிப்படுத்தியிருந்தார், இதுவரை நான் தன்னலக்கார குடும்பம் ஒன்றினால் சீரழிந்து வரும் ஒருவகை ஆட்சியின் வடிவத்தை பற்றிக் கேள்விப் படவேயில்லை என அவர் சொன்னார்.

அவர் யுத்தத்துக்கு பின்னான கொள்கைகளின் நிருவாகத்தில் உள்ள தவறுகளைப் பற்றிய மிகவும் முக்கியமான விமர்சனத்தையும் தெரிவிக்கையில் அது சமாதானத்துக்கான வாக்குறுதிகளை பூர்த்தி செய்வதில் தோற்றுவிட்டது என்றார்.

நிருவாகத்தின் இந்தத் தோல்விக்கு காரணம் என அவர் விளக்கியது, நிருவாகம் இனவாதம் மற்றும் மத வெறிகளை வளர்ப்பது, இராணுவக் கொள்கைகள் மற்றும் வடக்கிலுள்ள தமிழ் மக்களை வரையறைக்கு உட்படுத்துவது பிரதானமாக காணிகளை ஆக்கிரமிப்பு அல்லது கையகப்படுத்தும் விடயங்களை நடைமுறைப்படுத்துவது. சுவாரஸ்யமாக போர் முடிவடைந்தும் அதைப்பற்றிய சொற்பொழிவுகளுக்கு அப்பால் ஆட்சியால் மேலே நகர முடியவில்லை என அவர் கண்டனம் தெரிவித்தார்.

ஆட்சியானது அதன் சிந்தனையிலிருந்து ஒரு அங்குலம்கூட முன்னேறிச் செல்ல இயலவில்லை என அவர் சொன்னார். அதனால் எந்த புதுவித கருத்துக்களையும் அறிய முடியவில்லை. ஆட்சியிலுள்ள மூட நம்பிக்கையுள்ள போலி நவீனத்துவ இளம் சக்திகள் உட்பட இத்தகைய பழமைவாதம் மற்றும் பிற்போக்குத்தனம் கொண்டவர்கள்தான் யுத்த மனநிலையில் இருந்து,

பகிரப்பட்ட ஸ்ரீலங்கா தேசியத்தினை அடிப்படையாக கொண்ட நியாயமானதும் பிரகாசமானதுமான நாளையை நோக்கி முன்னேற முடியாமைக்கு பொறுப்பு என ஜே.வி.பி. தலைவர் அடையாளம் காட்டினார்.

அனுர திசாநாயக்கா ஒரு பகிரப்பட்ட ஸ்ரீலங்கா தேசியம் என்பது இனம், மொழி, மதம், அல்லது பிராந்தியம் என்கிற எதையும் கருத்தில் கொள்ளாது, அனைவரது சமத்துவ உரிமைகளை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே உருவாக முடியும் என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார்.

உணர்ச்சி பூர்வமான வசீகரிக்கும் பேச்சுக்கள் ஜே.வி.பி. இளையோர் தலைவர் பிமல் ரத்னாயக்கா இளம் தொழிற்சங்க அமைப்பாளர்களான வசந்த சமரசிங்க, ஐக்கியத்துக்கான பேரணியை சேர்ந்த மொகமட் கிசாம், தேசிய கிறிஸ்தவ சகோதரத்துவ அமைப்பை சேர்ந்த பிதா றோகான் ஏக்கநாயக்க, மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தை சேர்ந்த பிரியந்த கமகே ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டது.

துணிவும் கொள்கைப் பிடிப்பும் உள்ள அனைத்து வகுப்பையும் சேர்ந்த சித்தாந்தவாதிகள், பல்வேறு இனம்

**மரபு ரீதியான ஐ.தே.க. ஒரு மீள் எழுச்சிக்கான வேண்டுகோளுக்கான அறிகுறிகள் எதனையும் காட்டாதவரை, அடக்குமுறை நிலையை எதிர்த்து அதிகம் சமத்துவமும், இன ரீதியாக பாகுபாடற்ற எதிர்காலத்தையும், எதிர்நோக்கும் அனைவரினதும் சிறந்த முன்னிருப்புத் தெரிவாக அனுர குமார திசாநாயக்க எழுவார் என்பதில் ஐயமில்லை.**

மற்றும் மதம் என்பனவற்றை சேர்ந்த இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய அனைவரும் வரப்போகும் மற்றொரு கறுப்பு ஜூலை 83 தவிர்ப்பதற்காக இனவாதம் மற்றும் மதவாதத்துக்கு எதிராக அணிதிரண்டிருந்தார்கள், அதற்கான எங்கள் ஒற்றுமையைக் காட்ட நானும் எனது மனைவி சன்ஜாவும் அந்தப் பேரணியில் கலந்து கொண்டோம்.

அந்த மாலை நேரத்தில் எனது பிரதான மற்றும் மதிப்பான எண்ணத்துக்கு நெருக்கமாக வந்தவர் அனுர குமார திசாநாயக்க அவர்கள்தான், இப்போது அவர் குத்துச்சண்டையில் பிரபலமான இளம் முகமதலியை காட்டிலும் அதிகமாக மன்னி பக்குவையோ போலிருந்தாலும் நிச்சயமாக விரைவிலேயே ஒரு நம்பிக்கையான போட்டியாளராக வருவார்.

மரபு ரீதியான ஐ.தே.க. ஒரு மீள் எழுச்சிக்கான வேண்டுகோளுக்கான அறிகுறிகள் எதனையும் காட்டாதவரை, அடக்குமுறை நிலையை எதிர்த்து அதிகம் சமத்துவமும், இன ரீதியாக பாகுபாடற்ற எதிர்காலத்தையும், எதிர்நோக்கும் அனைவரினதும் சிறந்த முன்னிருப்புத் தெரிவாக அனுர குமார திசாநாயக்க எழுவார் என்பதில் ஐயமில்லை.

# வறட்சியில் அரசியல் இலாபம் தேட முனையும் எதிர்க்கட்சிகள்

## ஜனாதிபதி தெரிவிப்பு





(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமைகளை எதிர்க்கட்சிகள் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேட முனைகின்றன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமை தேர்தல் தொகுதியில் நாட்டைக் காக்கும் நீல அலை மகளிர் சம்மேளன மாநாடு நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை சிங்கப்பூர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திடீரென விஜயம் செய்தார். திடீரென வருகை தந்த ஜனாதிபதியை மகளிர் சம்மேளன உறுப்பினர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, நாடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா உட்பட பெண் பிரதிநிதிகள் பெரும் எண்ணிக்கையானோர் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க தெளிவான வேலைதிட்டம் அரசாங்கத்திடம் இருக்கின்றது.

நாட்டில் தற்போது பல பிரதேசங்களில் கடுமையான வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை வைத்து எதிர்க்கட்சிகள் அரசியல் லாபம் தேட முற்படுகின்றனர். என்றார்.

# கடத்தப்பட்ட சிறுவன் ஜனாதிபதியை சந்தித்தார்



இனந்தெரியாதோரினால் மர்மமான முறையில் கடத்தப்பட்ட கல்கமுவை மீகலேவையைச்சேர்ந்த சிறுவன் தினிது யசேன் தமது பெற்றோருடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இச்சிறுவனின் நலன் விசாரித்த ஜனாதிபதி, சிறுவனுக்கு நினைவுப்பரிசு ஒன்றையும் வழங்கினார். ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும், பொலிஸ் மா அதிபர் கே.இலங்ககோனும் இந்த நிகழ் வில் கலந்து கொண்டனர்.

# சிம் அட்டைகளை பதிவுசெய்ய வருட இறுதிவரை காலக்கெடு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் வழங்கியுள்ள சகல சிம் அட்டைகளும் இந்த வருட இறுதிக்குள் பதிவுசெய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொலைதொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது 21 மில்லியனுக்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட தெரிவித்துள்ளார்.

புதிதாக வழங்கப்படும் சிம் அட்டைகள் மூன்று நாட்களுக்கு பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயம். இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பெருந்தொகையான சிம் அட்டைகள் பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கல்கமுவ - மீகலேவ பிரதேசத்தில் சிறுவன் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்தே சிம் அட்டைகளைப்பதிவு செய்ய வேண்டும் என்ற யோசனைகள் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது குறித்து தகவல் வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன,

சிறுவனை கடத்திச் சென்றவர்களிடம் 7 சிம் அட்டைகள் இருந்துள்ளன. அவர்கள் இரண்டு சிம் அட்டைகளைப் பிரதானமாகப்பயன்படுத்தி வந்துள்ளனர்.

7 சிம் அட்டைகளில் ஒன்று கொழும்பில் மூட்டை தூக்கும் தொழிலில் ஈடுபடும் நாட்டாமி ஒருவரின் பெயரில் இருக்கின்றது.

குருணாகலில் இருக்கும் தொலைபேசி நிறுவனம் ஒன்றின் முகவர்கள் எந்த அடையாள அட்டைகளையும் பெறாது சிம் அட்டைகளை விநியோகித்து வருகின்றனர்.

எவராவது சிம் அட்டையை கொள்வனவு செய்யவரும் போது அவரகளிடம் அடையாள அட்டை இல்லையென்றால், முனனர் வாங்கியவர்களின் அடையாள அட்டையை பயன்படுத்தி அந்த முகவர் நிறுவனம் சிம் அட்டைகளை வழங்கியுள்ளது.

இது குறித்து விசாரணை நடாத்திவருகிறோம். கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் சிம் அட்டைகளை விற்ற நபர்களைக் கைது செய்வோம் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# பொய்ப்பிரசாரம் செய்வோர் கடுமையாக தண்டிக்கப்படுவர்

## இராணுவம் தெரிவிப்பு

சமூகங்களுக்கு இடையில் பொய்ப் பிரசாரங்களைப்பரப்புபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவம் தெரிவித்துள்ளது.

குறுந்தகவல் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக சமூகங்களுக்கிடையில் குறிப்பாக முஸ்லிம் மக்கள் மத்தியில் தவறான தகவல்கள்ளை வழங்கி, வன்முறையைத் தூண்டும் வகையில் சில கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக இராணுவப்பேச்சாளரும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையப் பணிப்பாளருமான, பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

மேலும், போலியான தகவல்களைப் பரப்புபவர்களை இனங்காண்பதற்காக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் கூறினார்.

இவ்வாறு வன்முறையைத் தூண்டும் விதத்தில் செயற்படும் குற்றவாளிகள் இனங்காணப்பட்டால் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பொலிஸ் அதிகாரிகளுக்கான பயிற்சி அடுத்த ஆண்டுவரை தொடரும்




பாதுகாப்பு படைத்தரப்பினருக்கான விசேட பயிற்சியினை ஸ்கொட்லாந்து பொலிஸார் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு வரை வழங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல 3 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு ஸ்கொடலாந்து பொலிஸ் கல்லூரியில் பயிற்சி வழங்கப்பட்டதாக "சண்டே ஹெரல்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஸ் வெளிவிவகாரத் துறையின் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

# ஐ.நா.சபை விசாரணையை அலட்சியப்படுத்த முடியாது

## முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபை விசாரணையை அலட்சியப்படுத்த முடியாது என முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா தெரிவிதுள்ளார். அரசாங்கம் பணம் வழங்குவதன் மூலமாக ஆலோசனைக் குழுவிடமிருந்து சாதகமான அறிக்கையைப் பெற முயல்கிறது.


ஐ.நா. விசாரணையை அலட்சியப்படுத்த முடியாது அரசு அதனை செவிமடுக்கவே வேண்டும், தற்போது அரசாங்கம் ஆலோசனைக்குழுவைப் பயன்படுத்த நினைக்கின்றது. இது ஒரு நகைச்சுவை நாடகமாக மாறப்போகின்றது.

எங்களை நாங்களே நியாயப்படுத்தியிருக்க முடியும், அரசாங்கம் விசாரணையை எதிர்கொண்டு யுத்தக் குற்றங்கள் இடம்பெறவில்லை என நிரூபித்திருக்க வேண்டும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் நிலைமையை மேலும் மோசமாக்கின்றன. ஆணைக்குழுவின் ஆணைகளை விஸ்தரித்ததும் அது நிலமையை மேலும் சிக்கலாக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் மலையகத்தில் துன்பம் பறந்தோடும்

## ரணில் தேர்தல் வாக்குறுதி



(கண்டி)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் மலையக மக்களின் துன்பம் பறந்தோடும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'ஜனஜய' திட்டத்தின் ஒரு அம்சமாக மஸ்கெலியா பகுதி வாக்கெடுப்பு நிலைய பொறுபபாளர்களுக்கான அறிவுறுத்தல் நிகழ்வு ஹட்டன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்று முன தினம் இடம்பெற்ற போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும தெரிவிக்கையில்,

நான் இப்பகுதியின் பல இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்த போது பாதைகள் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்தேன். என்னவென்று கேட்டபோது பாதைகளுக்கு காப்பெட் இடுவதாகக் கூறினார்கள். இந்த நாட்டு மக்களை நடு வீதிக்குக்கொண்டு வந்த பெருமை அரசாங்கத்தையே சேரும்.

நாம் ஆட்சிக்கு வந்தால் மலையக மக்களுக்கென வீட்டுத்திட்டத்தை உருவாக்குவோம். ஏனெனில் இம்மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள் பற்றிய தெளிவு அக்காலத்திலிருந்து ஐ.தே.கட்சிக்கு மட்டுமே உள்ளது. உலகத்திலேயே எங்குமில்லாத அதிசயம் இலங்கையிலேயே நடக்கின்றது. அந்தளவிற்கு இந்த ஆட்சியின் பொருளாதார கொள்கை உள்ளது. பால் ஒரு லீற்றர் 49 ரூபாவிற்கு பண்ணையாளர்களிடம் பெறப்படுகிறது. கடையில் விசாரித்துப் பாருங்கள் ஒரு லீற்றர் தண்ணீர் போத்தலின் விலை 60 ரூபா ஆகும்.

மற்ற நாடுகளில் எல்லாம் தண்ணீரை விட பாலின் விலையே அதிகம். எந்தளவிற்கு இந்த மக்கள் சுரண்டப்படுகின்றார்கள் என்பதற்கு இது ஒன்றே போதும். இன்று பெருந்தோட்ட மக்களின் வருமானம் எவ்விதத்திலும் போதாதுள்ளது.

இதற்கு ஒரே வழி ஆட்சி மாற்றத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இப்பகுதியில் நல்ல மரக்கறிகள் விளைகின்றன ஆனால் அதனால் இலாபமடைவது விவசாயிகள் அல்ல: முதலாளிகள் தான். இப்போது முதலாளிகளுக்கும் பிரச்சினை என இங்கு பலர் கூறுகிறார்கள்.

அபிவிருத்தி என்பது எந்த ஆட்சிக் காலத்தில் இருந்தது என்பதைப்பட்டியலிட்டுப் பாருங்கள் புரியும். ஐ.தே.கவால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் இன்று எத்தனை ஆடைத்தொழிற்சாலைகள் இயங்குகின்றன? ஆகவே வீதிகளை காப்பெற் இடுவது அபிவிருத்தி அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கான அடிப்படை வசதிகளான வீடு, வருமானம், உணவு, நிம்மதியான வாழ்க்கை இதைப பெற்றுக்கொள்ள அனைவரும் ஒன்றுபடுங்கள் என்றார்.

# கலைக்கான முக்கியத்துவம் குறைவதற்கு

# தொழில் பெற முடியாமையே காரணம்

## விரிவுரையாளர் லலீசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பட்டதாரியாகி விடலாம் ஏதோ ஒரு வேலைவாய்ப்பைப் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்திலேயே இன்று பலர் நுண்கலைப்பாடங்களைப் பயில்கின்றனர். அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பின் போதும் நுண்கலைப்பாடங்களைப் பயின்றோருள் பெரும்பான்மையினருக்கு பாடத்துடன் தொடர்புடைய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. இத்தகு நிலைமைகளால் கலையை வளர்ப்பதற்கு அல்லது கலை சார்ந்த புதுமைகளைச் செய்வதற்கு நம்மவர்களுள் பெரும்பான்மையோரால் முடியாது போகின்றது என கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தெரிவித்தார்.

நல்லை க. கண்ணதாசனின் புதல்வனும் மாணவனுமாகிய இசைநிலவனது மிருதங்க அரங்கேற்றம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பிள்ளையும் ஏதோ ஒரு கலைக் கற்கையையாவது பயில வேண்டும். இன்று நம்மத்தியில் ஏற்படுகின்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் போட்டித்தன்மை, க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் ஏற்படும் போட்டித் தன்மை என்பன இக்கலைக் கற்கைகளுக்குத் தடையாக அமைகின்றன. மிருதங்கம் பயின்றால் தங்கள் பிள்ளைகள் அரச பரீட்சையில் கோட்டை விட்டு விடுவார்கள் என பெற்றோர் நம்புகின்றனர். ஆனால் உண்மை அதுவன்று. கலைத் திறமையைச் சிறப்பாக வெளிப்படுத்தக் கூடியவர்கள் தான் கல்வியிலும் பிரகாசிக்கின்றார்கள். அத்துடன் அரங்க ஆற்றுகைக் கலைகளைக் கற்பது சமநிலை ஆளுமை வெளிப்பாட்டிற்கான ஆதாரமாகவும் அமைகின்றது.

கலைகற்கையில் குடும்பப் பின்புலங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக விஞ்ஞான ரீதியில் நிறமூர்த்தங்கள் எனப்படுகின்ற ஜீன்கள்

செல்வாக்குச் செலுத்துகின்றன. இசைநிலவனுக்கு அத்தகைய பாரம்பரியம் சிறப்பாக இருப்பது கடவுள் அவருக்குக் கொடுத்த வரமாகும் என்றார்.

(63)

## முரசின் இன்றைய பலன்

(05.08.2014 செவ்வாய்க்கிழமை)



ஜய வருஷம் ஆடி மாதம் 20 ஆம் திகதி.
மரணயோகம் / நவமி.
விசாக நட்சத்திரம் மு.ப. 07.15 வரை. பின் அனுசம்.
இராகு காலம் 03.04 - 04.34 வரை. சுபநேரம் 10.34 - 12.04 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்ய பணமுடைமையினால் கடன்பட நண்பரை நாடல், போலி ஆவணங்கள் பொய்யா தெனக்கண்டு பிடிக்கப்பட்டதனால் கைது செய்யப்படல். |
| ரிஷபம் | பிதாமற்றும் மூத்த சகோதரர் உதவிக்கரம் நீட்டி இக்கட்டான நிலையிலிருந்தும் காப்பாற்றிவிடுதல், குழந்தைப் பாக்கியம் கிட்டிவிட்டதென்று அறிகுறி காணப்படுவதை நினைத்து மகிழ்வுறல். |
| மிதுனம் | தொழில் முன்னேற்றத்துக்காக எதிர்பாராத ஒருவரைச் சந்தித்ததால் மகிழ்வு தக்கவைத்தல், நிறை குறைவாக விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டமையினால் தகராறு ஏற்படல். |
| கடகம் | எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தைப் பற்றிபிடித்து முன்னேறப்பாருங்கள், லீசிங்கில் பெற்ற வாகனத்தின் நிலுவைகட்ட முடியாத நிலையில் பணம் புரட்ட நண்பரை நாடுதல். |
| சிம்மம் | ஏற்கனவே திட்டமிட்டதால் பணிச்சுமை குறைந்து நிம்மதி ஏற்படல், திறப்பு விழாக்கள் மற்றும் கலை நிகழ்வுகளில் தம்பதியர் சகிதம் பங்குபற்றல். |
| கன்னி | பெற்றோரைப் பராமரிக்க உதவியாளர் தேவை என விளம்பரப்படுத்த முயற்சித்தல், பணக் கொடுக்கல் வாங்கல் சுமுக நிலையில் இருப்பதினால் மனதில் நிம்மதி ஏற்படல். |
| துலாம் | இக்கட்டான சந்தர்ப்பம் ஒன்றில் முறையாகப் பேச முடியாது தத்தளித்தல், தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய விலைக்கழிவு யுக்தியை கையாண்டதால் மனத்துயர் நீங்குதல். |
| விருச்சிகம் | சகபாடிகளைக் கைவிட்டு மனந்திரிந்திவாழத் தலைப்பட்டதைக் கைவிடாதிருத்தல், நட்பு வட்டாரங்கள் மனதிற்கு இன்பமூட்டியதால் விற்பனை அமோகமாதல். |
| தனுசு | பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடித்ததால் முரண்பட வந்தவரின் நோக்கம் நிறைவேறாது விடல், ஏற்கனவே திட்டமிட்டதால் காரியங்கள் திறம்பட நிறைவேறி பணிச்சுமை அற்றுப்போதல். |
| மகரம் | சிக்கனத்தைக்கடைப்பிடிக்க முயன்றாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரித்துக் காணப்படும், நல்ல வாய்ப்புக்களைக் கடந்த காலங்களில் கைவிட்டுவிட்டோமே என்று ஆதங்கப்படுதல். |
| கும்பம் | பேதங்களை காரணமாக விவாக நிலையடைந்த முதிர் கன்னிகள் கட்டிக்கொடுக்க முடியாது கவலையுறல், தவறுகளுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். |
| மீனம் | நீண்ட நாட்களாக இழுபட்டிருக்கும் நிலுவை பெறுவதற்கு முறைப்பாடு செய்ய எண்ணமிடல், பொருட்களை விற்பனை செய்ய மனைதேடிவருவோர் அதிகவிலைக்கு விற்க முயற்சி எடுத்தல். |

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் ஐந்தாம் நாளான இன்று "கால்பட்டழிந்தது தலையெழுத்து" என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சிறப்பு சொற்பொழி வாற்றவுள்ளார்.

தொடர்ந்து நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா, திடற்புலம் நரசிங்க வைரவர், குப்பிளான் கன்னிமார் கௌரி அம்பாள், வண்ணார் பண்ணை இலக்கண சுவாமிகள் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

◆◆◆

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.


இதில் ஐந்தாம் நாளான இன்று செல்வி ரி.பவனுஜா, எஸ்.சுபாகரனின் இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

## வரலட்சுமி பூசை

(கரணவாய்)

உடுப்பிட்டி இமையாணன் நாவலடி திடல்பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூசை இடம்பெற்று காப்பு வழங்கப்படவுள்ளது. வரலட்சுமி காப்பு நூல் பெற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளுமாறு பரிபாலன சபை தலைவர் அறிவித்துள்ளார். (18)

## நல்லைக் கந்தனுக்கு இன்று 5 ஆம் நாள் திருவிழா



### வள்ளிதெய்வானை மகிழ்ந்தனே!

ஆறுமுகன் திருவிழாவும் நல்லூரில் சிறக்கட்டும்
ஏறுமயில் ஏறியவன் எழிலோடு தோன்றட்டும்
மாறுஇலா வள்ளிதெய்வ யானையாரும் மகிழட்டும்
கூடுமடியார்கள் வினை தீர்த்துஅவன் அருளட்டும்
வீறுகொண்டு வேல் எழுந்து வெவ்வினைகள் களையட்டும்
ஆறுபடை வீடுமிந்த அழகூரில் திறக்கட்டும்
பேறுபெற்ற மாந்தரதைக் கண்டுகளித் தாடட்டும்
வேறுபாடு இன்றிவேலன் எல்லோற்கும் அருளட்டும்
தூறுகின்ற பக்தியிங்கு பெருமழையாய்ப் பெய்யட்டும்
நூறுமுகமாக அந்த ஆறுமுகம் துலங்கட்டும்
சீறுகின்ற சிறுமையெலாம் சிவமகனால் சிதறட்டும்
மீறுகின்ற தீயவைகள் திருமகனால் அழியட்டும்.

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

### துயர் களைந்திடும்!

தொண்டுகள் செய்து தொழுது நல்லூர் வந்தால்
தொல்வினைகள் தொலைந்து போம், ஞாலத்தில்
பண்டுதொட்டு பார்வதியின் மகன் சரவணன்
கதை பக்குவமாய் கேட்டறிய பாறுமடவினை
விண்ணாணமாக வந்தமர்ந்த பாழும் துயர்
கண்ணாலேகண்டு கண்ணீர் விட்டு
தன்னாலே நீ அழுதால் தருவான் சொர்க்கம்காண்
தளபதியவன் தந்தால் கைமீட்பான், கேள்!

-மண்டைதீவு மகிழ்நன்-

### வரமருள் அமைதித் தீர்வுக்காய்!

கந்தா கடம்பா கலியுக வரதா
கார்த்தி கேயா கதிர்வேலா
சிந்தா குலந்தீர் சேந்தா முருகா
செங்கதிர்ச் செல்வா சேயோனே
நந்தா வரமருள் நல்லைக் குமார
நாரியர் இருவர் புடைசூழ
வந்தால் மட்டும் போதா தையா
வரமருள் அமைதித் தீர்வுக்காய்!

-கவிஞர் - நயினை இராகுலன்-

### உள்ளம் உருகுதையா!

வள்ளி மணவாளனே! விநாயகரின் தம்பியரே!
புள்ளி மயில்மீதேறிப் புவியளந்த புண்ணியனே!
உள்ளம் எனும்நல்லூரில் உறைகின்ற குகனே!
கள்ளமற்ற அடியவர்கள் கண்டுதொழ உலாவாருமையா!

-கவிஞர் சரசாலையூரான்-

### முருகனை பாட ஓடிவருகிறேன்!

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பதை
முருகா உன்னிடத்தில் கண்டுகொண்டேன்
நேர்த்தியாக நீ இருப்பதனாலன்றோ நல்லூர்
நேரந் தவறாமல் பூசைவரம் கிடைக்கிறது.

குழந்தைகளின் துன்பம்கண்டு துடிக்கின்றேன்
கொடியதான வேள்விகண்டு அழுகின்றேன்
பழந்தமிழ்ப் பண்பாடுகண்டு வியக்கின்றேன்,
பத்திரமாய் முருகனைப்பாட ஓடி வருகின்றேன்.

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-



# இளமை, புதுமை

கொமன்வெல்த் போட்டியின் ஹைலைட்டாக இம்முறை பதக்கம் வழங்கும் விழா அமைந்தது. பாரம்பரிய உடையணிந்த இளம் பெண்கள், பதக்கங்களை ஏந்தி வந்தமை மிகவும் புதுமையாக இருந்தது.

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற 20ஆவது கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி இனிதே முடிந்தது. இதில், வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு தலா 100 கிராம் எடை கொண்ட தங்கம், வெள்ளி, வெண்கலம் என மொத்தம் 1,380 பதக்கங்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு பதக்கத்தையும் வீரர்கள் தங்களது இரத்தம், வியர்வை சிந்தி பெற்றனர். இதனை உணர்ந்து பதக்கம் அளிக்கும் விழாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பதக்கத்தை ஏந்தி வரும் இளம் பெண்களுக்காக, பல நிறக் கட்டங்கள் அடங்கிய கம்பளித் துணியால் நெய்யப் பெற்ற பிரத்தியேக உடையை பிரபல ஸ்கொட்லாந்து டிசைனர் கெர்ரி நிக்சன் வடிவமைத்தார்.

இது குறித்து கெர்ரி கூறுகையில்,1970களில் இருந்து நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியின் பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியை வீடியோவில் பார்த்தேன். இதிலிருந்து வித்தியாசமாக எதையாவது செய்ய விரும்பினேன். பதக்கம் எடுத்து வரும் பெண்கள் இளமையானவர்கள் என்பதால், சற்று கவர்ச்சியாக உடையை வடிவமைத்தேன். ஸ்கொட்லாந்து பாரம்பரியப்படி அமைந்த இந்த உடை, உலக இரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. அனைவருக்கும் மறக்க முடியாத உணர்வைத் தந்தது என்றார். பதக்கம் அளிக்கும் நிகழ்ச்சிக்கு முன், வீரர்களின் துணிச்சலான செயற்பாட்டை பாராட்டி ஸ்காட்டிஷ் சேம்பர் ஆர்க்கெஸ்டிராவின் பாடல் இசைக்கப்பட்டது, பேக்பைப்பரின் இன்னிசை போன்றவை கிளாஸ்கோ போட்டியின் சிறப்பம்சங்களாக அமைந்தன.

28 வருடங்களின் பின் கொமன் வெல்த் விளையாட்டு விழாவில்

# இங்கிலாந்து முதலிடம்

கிளாஸ்கோ 20ஆவது கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்துள்ளன. மொத்தமாக 17 விளையாட்டுப் பிரிவுகளில் 261 தங்கப் பதக்கங்களுக்கான போட்டிகள் கடந்த 11 நாட்களாக நடந்தன.

இம்முறை விளையாட்டு விழாவில் இங்கிலாந்து அணி 58 தங்கம், 59 வெள்ளி அடங்கலாக 174 பதக்கங்களை வென்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. கொமன்வெல்த் போட்டிகளில் இங்கிலாந்து 28 ஆண்டுகளுக்குப் பின்னர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இரண்டாம் இடத்தைப் பிடித்த அவுஸ்ரேலியா 49 தங்கம், 42 வெள்ளி அடங்கலாக 137 பதக்கங்களை வென்றது. கனடா 32 தங்கம் அடங்கலாக 82 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திற்கு வந்தது. போட்டியை நடாத்திய ஸ்கொட்லாந்து 19 தங்கம் அடங்கலாக 53 பதக்கங்களை வென்று நாலாவது இடத்தைப் பிடித்தது. கடந்த தடவை டில்லி கொமன்வெல்த் போட்டிகளில் 38 தங்கம் அடங்கலாக 101 பதக்கங்களை வென்று இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்த இந்தியா இம்முறை கிளாஸ்கோவில் ஐந்தாம் இடத்தையே பிடிக்க முடிந்தது. இப்போட்டி நிகழ்வில் அவுஸ்ரேலியாவின் பிரபல பாடகி 46 வயதான கைலி மினோக்கும் கலக்கினார்.









## பந்துவீச்சு, களத்தடுப்பில் முன்னேற்றம் வேண்டும்

களத்தடுப்பு மற்றும் பந்துவீச்சில் இந்திய அணி சிறப்பான முறையில் செயற்பட்டால் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முடியும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்துள்ளார். இந்திய அறிமுக பந்துவீச்சாளர் பங்கஜ் சிங் முதல் முறையாக சர்வதேச களத்தில் பந்து வீசினார். இது துடுப்பாட்டத்திற்குச் சாதகமான ஆடுகளமாக இருந்தாலும், அவர் விக்கெட் எடுக்கும் அளவுக்கு நன்றாகவே பந்து வீசினார். ஆனால் அவரது பந்து வீச்சில் களத்தடுப்பாளர்கள் பல பிடிகளைத் தவற விட்டு விட்டனர். இதனால் இந்தப் போட்டியில் அவருக்கு விக்கெட்டே கிடைக்காமல் போய் விட்டது. பாவம், இந்த இளைஞர். ஸ்லிப் பகுதியில் பிடி எடுப்பது எளிதான காரியம் அல்ல. அதற்கு தொடர்ச்சியாக பயிற்சி அவசியம். ஏனெனில் தொடர்ந்து பிடிகளைத் தவற விட்டால், எதிரணியின் 20 விக்கெட்டுகளையும் வீழ்த்த முடியாது. அதன் பின்னர் பந்துவீச்சாளர்களின் நிலைமை கஷ்டமாகி விடும். லோட்ஸ் டெஸ்டில் களத்தடுப்பில் இந்தியா சிறப்பாக செயற்பட்டது. ஆனால் சௌத்தம்டனில் சில பிடிகளை நழுவ விட்டனர். இதை தொடர அனுமதிக்க கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## ஓய்வு குறித்து சிந்திக்கவில்லை

**சகீர்கான்**

ஓய்வு பெறுவதைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கவில்லை என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.

இது எனக்கு போராட்டம் நிறைந்ததாக உள்ளது. இந்தியாவுக்காக விளையாடுவது என்பது எளிதல்ல. ஆனால் இப்போது காயம் என்னை பாடாய் படுத்துகிறது. எனக்கு நேரம் சரியில்லை என்று தான் சொல்ல வேண்டும். என்து கடந்த நாட்களை திரும்பிப் பார்த்தால் நான் காயப்பட்டது தான் அதிகமாக இருக்கும். ஆனால் நான் ஒரு போதும் ஓய்வு பெறுவதைப் பற்றி நினைத்தும் பார்த்தது இல்லை. திருமணமா? நான் தனியாக இருப்பதால் நிம்மதியாக இருக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது பெங்களூர் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் ஓய்வு பெற்று வரும் சகீர்கான் இந்த ஆண்டு நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக களமிறங்குவார் என எதிர் பார்க்கப்படுகிறது.



## நான்காவது டெஸ்ட்டில் பிளங்கெட் நீக்கம்

(மான்செஸ்டர்)

இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் மான்செஸ்டரில் நடைபெறவுள்ளது. இந்த டெஸ்டில் இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் லியாம் பிளங்கெட் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

கணுக்கால் காயத்தால் அவதிப்படும் அவருக்கு பதிலாக ஸ்ரீபன் பின் சேர்க்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, இந்திய அணியிலும் காயம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. காயத்தால் இசாந்த் சர்மா 4ஆவது டெஸ்டிலும் ஆட முடியாத நிலையில், இன்னொரு பந்து வீச்சாளர் புவனேஸ்வர்குமாரும் கணுக்கால் காயத்தில் சிக்கியுள்ளார். இதனை கவனத்தில் கொண்டுள்ள இந்திய முன்னாள் கப்டன் கங்குலி, 4ஆவது டெஸ்டுக்கான அணியில் வருண் ஆரோனுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். தவானுக்கு பதிலாக, கம்பீரை சேர்க்க வேண்டும் என்றும் கங்குலி சூசகமாக தெரிவித்துள்ளார்.

## அரசியலில் ஈடுபடும் எண்ணமில்லை

கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அரசியலில் ஈடுபடும் எண்ணம் கிடையாது என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் இடம்பெற்ற கருத்து பரிமாறலின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், பயிற்சியாளராக பணியாற்ற வேண்டும் என்பது தனது விருப்பம். அரசியலுக்குள் நுழையும் எண்ணம் என்னிடம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்க, சனத் ஜெயசூரிய ஆகியோர் அரசியலில் ஈடுபட்டு வருவதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பதவி வகித்து வருகின்றனர். அதேபோல் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன்களில் ஒருவரான ஹசான் திலகரட்ன ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் அரசியலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் காலியில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டித் தொடரில் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ள இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தனவைக் கௌரவிக்கும் வகையில் மைதானத்தைச் சுற்றி அவருடைய சாதனைகளைக் குறிக்கும் பதாகைகளால் அலங்கரிப்பு செய்யப்பட்டு வருகின்றதைக் காணலாம்.

### டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

# இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி.

(யாழ்ப்பாணம்)

ராகுலன், ஜனுதாஸ் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் கொக்குவில் கே.சி.சி.சி. அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண ஒரு நாள் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மானிப்பாய் பரிஷ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி ராகுலின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி 47.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராகுலன் மூன்று சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்லாக 51, ஆதி 31, கேதீஸ்வரன் 32, உமகாந் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிசோ, பிரசாத் ஆகியோர் தலா மூன்று, பிரதீபன் இரண்டு . விக்கெட்டுக்களைக்



கைப்பற்றினர்.

பதிலுக்கு 211 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் அணி யனுதாஸின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியா-மல் வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பரிஸ் அணி 36.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் சுபாஸ் 48, கிசோ 20, வினோத் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யனுதாஸ் மூன்று, சிலோஜன், சுஜிதரன், பவிதரன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 62 ஓட்டங்களால் வெற்றிபெற்ற கொக்குவில் கே.சி.சி.சி. இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக ராகுலன் தெரிவு செய்யப்பட்டார். (எஸ்.பி.)

## வென்றது யாழ். சென்றல்

சிநேகபூர்வ ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். சென்றல் அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஹாட்லியிஸ்ர், யாழ். சென்றல் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த வாரம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 31 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றொகான் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹாட்லியிஸ்ர் அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் எவரும் இரட்டை இலக்கு எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளவில்லை. பந்து வீச்சில் சுபாதீஸ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (எஸ்.பி.)

## இரண்டாவது சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு இளவாலை மத்தி, மட்டுவில் மோகன-தாஸ், ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை நடாத்தி வருகின்றது. இதில் ஏ, பி என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

பி பிரிவுக்கான மூன்று போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதல் போட்டியில் இளவாலை மத்தி அணியும் உடுப்பிட்டி சிவகுமாரன் அணியும் மோதின. இதில் இளவாலை மத்தி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், புத்தூர் சோமஸ்கந்தன் அணியும் மோதின. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2-0 செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் பி அணியும் நாயன்மார்கட்டு பாரதி அணியும் மோதின, இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (93)

### மென்பந்து கிரிக்கெட்

# அச்சுவேலி கதிரொளி சம்பியன்

(அச்சுவேலி)

அமரர் சுப்பிரமணியம் தற்பரனின் 31ஆவது நாள் நினைவையொட்டி நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அச்சுவேலி கதிரொளி அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த வாரம் கதிரொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் அச்சுவேலி கதிரொளி அணியும் நவக்கிரி எல்லாளன் அணியும் மோதிக் கொண்டன.

நாணயற் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அச்சுவேலி கதிரொளி அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது. இதில் மதுஷாந் 67, துஷி 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விதுஷன், திவா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நவக்கிரி எல்லாளன் அணி 14.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் விதுஷன் 49,



டிலக்ஷன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் டவாத் மூன்று, சாள்ஸ் மற்றும் ஜனக்ஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 31 ஓட்டங்களால் வெற்றிபெற்ற அச்சுவேலி கதிரொளி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக மதுசன், தொடர் நாயகனாக விதுஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பிடித்துக் கொண்ட யாழ். மாவட்ட ஆண்கள் அணி வீரர்கள் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டனர். வல்வை சேவா நிலையத்தில் நடைபெற்ற இக்கௌரவிப்பு நிகழ்வை வடமாகாண சபை உறுப்பினர்களான, எம்.கே.சிவாஜிலிங்கம், பாலச்சந்திரன் கஜதீபன், சந்திரலிங்கம் சுகிர்தன், விந்தன் கனகரத்தினம், இமானுவல் ஆர்னோல்ட், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் கந்தசாமி சதீஸ் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது, யாழ். அணி வீரர்களுக்குப் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (48)

## கிண்ணம் வென்றது மகிழ்ச்சி

அர்ப்பணிப்பும் ஆத்ம விஸ்வாசமும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம். கடந்த காலங்களில் மோசமான பல விளைவுகளை நான் எதிர்கொண்டுள்ளேன். இதிலிருந்து மீண்டு கிண்ணம் வென்றது மகிழ்ச்சி என ரென்னிஸ் வீராங்கனை கரோலின் வொஸ்னியாக்கி தெரிவித்துள்ளார்.


இறந்த காலம் இறந்த காலத்திற்கே சொந்தமானது. அதை நான் செய்து காட்டி நிரூபித்துள்ளேன். அர்ப்பணிப்பும் ஆத்ம விஸ்வாசமும் இருந்தால் எதனையும் சாதிக்கலாம். வில்லியம்ஸ் சகோதரிகள் மற்றும் மரியாவுடனும் மோத நான் தயாராகவுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்தான்புல் சம்பியன் ஸிப் கேடய ரென்னிஸ் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் எந்தவொரு சவாலும் இன்றி இலகுவாக இளம் ரென்னிஸ் வீராங்கனை கரோலின் வொஸ்னியாக்கி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் போட்டி போடும் இந்தியாவும், சீனாவும்

இந்தியாவின் பாரதிய ஜனதா அரசாங்கம் இலங்கை மீது கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து கெடுபிடிகளை மேற்கொண்டு தமிழர்களின் நலன்களுக்காக செயற்படும் என்ற ஒரு





பார்வை ஏற்பட்டு வந்த போதிலும் அது தற்போது தவிடு பொடியாகி இந்தியா தனது தேசிய நலன்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து செயற்படும் என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதிகாரப் பகிர்வு இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்பதே இந்தியாவின் கொள்கையாக உள்ளது. தமிழர்களின் நலன்களுக்காக இந்தியாவின் தேசிய நலன்களை தியாகம் செய்ய முடியாது என்று பாரதிய ஜனதாக் கட்சியின் மூலோபாய செயற்பாட்டுக் குழுவின் தலைவரும், மற்றும் பா.ஜ.க. தேசிய நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவரும் ஆகிய சுப்பிரமணிய சுவாமி வெளிப்படுத்தி உள்ளார்.

அத்துடன் இந்தியா இலங்கையுடன் இராணுவ ரீதியிலான ஒப்பந்தங்களிலும் எதிர்காலத்தில் கையெழுத்திடும் என்று ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவ்வாறு இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவு நெருக்கமானதாக தற்போது பேணப்பட்டு வருகின்ற போதிலும் சீனாவுடன் இலங்கை ஏற்படுத்தி வருகின்ற உறவுகள் இந்தியாவை அசௌகரியப்படுத்தி உள்ளமையையும் மறுக்க முடியாது. ஆனால் ராஜதந்திர ரீதியாக இதனை வெளிப்படையாக எதிர்க்காமல் சீனாவுடன் போட்டி போட்டு இலங்கைக்கு உதவுவதன் மூலம் அதை மேவ இந்தியா செயற்பட்டு வருகின்றது.

ஜெனீவா பிரேரணைகள் இலங்கைக்கு தண்டனை கொடுக்கும் செயற்பாடுகளாக அமைவதால் இலங்கையின் உள்ளக விடயங்களில் அனாவசிய தலையீடுகள் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் ஆதரவாக இருக்காது என்றும் இலங்கையில் இன அழிப்பு என்னும் வகையில் ஒன்றும் நடக்கவில்லை என்றும் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தது.

இவ்வாறு இலங்கையை அரவணைத்துச் செல்லும் செயற்றிட்டத்தில் இந்தியா கவனம் செலுத்தி வருகின்ற அதே வேளை சீனாவும் இலங்கையில் தனது செயற்பாடுகளை விஸ்தரித்து வருகின்றது. இலங்கையுடனான உறவுகளில் பாதுகாப்பு ஒத்துழைப்பு முக்கியமான இடத்தை வகிப்பதாக சீனா வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

அதாவது சீன மக்கள் விடுதலை ராணுவம் நிறுவப்பட்டு 87ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி அண்மையில் கொழும்பிலுள்ள ஹில்டன் விடுதியில் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய சீன இராணுவ அதிகாரியும், கொழும்பில் உள்ள சீன தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகருமான கோல் லீ சென்ங்லின் இக்கருத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

"இதற்கு முன்னர் இருந்திராத வகையில் சீனா உலகில் ஏனைய நாடுகளுடன் இணைந்து வருகிறது. சீனாவின் பாதுகாப்பும் அபிவிருத்தியும், ஒட்டுமொத்த உலகினதும் அமைதி மற்றும் செழுமையுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கிறது. இலங்கையில் முதல் முறையாக சீனாவின் ஆயுதப்படைகள் நாள் வரவேற்பு நிகழ்வு இடம்பெறுகிறது. சீனாவும் இலங்கையுடன் மரபு ரீதியாக

நட்புக்கொண்ட அண்டை நாடாக செயற்பட்டு வருகிறது. இரண்டு நாடுகளும் பரஸ்பரம், அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஒத்துழைப்பு, மற்றும் இராணுவ துறைகளில் வளர்ச்சியை அனுபவித்து வருவதுடன், பிராந்திய அனைத்துலக விவகாரங்களில் நெருக்கமான கலந்துரையாடல் மற்றும், சந்திப்புகளை நடத்தி வருகின்றன.

உயர்மட்ட ராணுவ அதிகாரிகளின் பயணங்கள், ஆட்களைப் பரிமாறிக் கொள்ளுதல், கப்பல் பயணங்கள், இராணுவப் பயிற்சி நெறிகள் உள்ளிட்ட இருதரப்பு இராணுவ உறவுகள் என்பவற்றில் இரு நாடுகளும் உறுதியான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றன. இவை இரு நாடுகளுக்கும் வினைத்திறன் மிக்க விளைவுகளைப் பெற்றுத் தரும் என்று சீன அரசு உறுதியாக நம்புகிறது" என அவர் கருத்து வெளிப்படுத்தி இருந்தார்.

இந்த நிகழ்வில் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார்.

இலங்கை தொடர்பில் தற்போது மேற்குலகம் கூடுதலான கரிசனையை செலுத்தி வருகின்ற நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பொறிமுறைகளை உடைக்கும் நோக்கில் சீனாவும், இந்தியாவும் எதிரும், புதிருமாக போட்டிபோட்டு இலங்கைக்கு உதவ முனைகின்றன.

இலங்கை திருகோணமலையில் சீன நிறுவனம் ஒன்று விமான பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைக்க அனுமதி அளித்துள்ள விவகாரம் இலங்கை இந்திய உறவை பாதிக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாக சில ராஜதந்திரிகள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சீன நிறுவனம் ஒன்று இலங்கையில் விமான பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதில் தவறுகள் கிடையாது. ஆனால் அதன் அமைவிடம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்துவதாகவும், இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையிடமும், இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவிடமும் தங்கியிருப்பதால் அவதானமாக இத்தகைய விடயங்களை அணுக வேண்டுமென இந்திய

**- வே.அர்ச்சுணன் -**

கொள்கை வகுப்பாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இதே வேளை நரேந்திர மோ[illegible] தலமையிலான இந்திய அரசு சீனாவுடன் சுமுகமான உறவுகளை பேணவே விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்குரிய இராஜதந்திர முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் இந்தியாவும், சீனாவும் தங்களது தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் கேந்திர மைய இராணுவ நிலைமைகள் தொடர்பில் விழிப்பாகவே இருந்து வருகின்றன.

குறிப்பாக இந்த இரண்டு நாடுகளும் தமிழர் பிரச்சினையை ஒரு கருப்பொருளாக கொள்ளாமல் தங்களது நாடுகளின் கேந்திர இராணுவ பொருளாதார அர சியல் வலையமைப்புகளுக்கு முதன்மை கொடுத்து இலங்கையை மையப்படுத்தி செயற்பட்டு வருவதுடன் தொடர்ந்தும் இவ்வாறே செயற்படப்போகின்றன.

எனவே இவ்விடயத்தில் விழி[illegible]க இருந்து அரசுடன் பேசி தமிழர் பிரச்சினையை அரசியல் வழிமுறைகள் மூலம் தீர்ப்பதே தமிழர்களுக்கு உள்ள ஒரே தெரிவாகும்.

# நல்ல சகுனம் நழுவ விடாதே!

**- மோகனகிருஷ்ணன்**


"இன்றைக்கு யார் முகத்திலே முழித்தேனோ தெரியவில்லை எதுவும் சரியா நடக்கவில்லை" என்ற புலம்பல்களை நாம் கேட்டிருப்போம். அதே போல் வெளியே கிளம்பும்போது "எங்கே போகிறாய்?" என்று யாராவது கேட்டுவிட்டால் அவ்வளவுதான். நாம் நினைத்த காரியம் தடைபடுமோ என்று மனம் சஞ்சலப்படும். பூனை குறுக்கே போவது, காகம் கத்தினால் உறவினர் வருவார்கள், 13ஆம் நம்பர் ராசியில்லை, மணியோசை கேட்டால் நல்லது - இப்படி ஏராளமான நம்பிக்கைகள்.

வரப்போவதை ஏதோ ஒரு வகையில் அடையாளம் காட்டும் நிகழ்வுகளுக்கு பொதுப் பெயர் நிமித்தங்கள். Omen என்று பொதுவாகச் சொல்வது நிமித்தம்தான். பறவைகளால் அறியப்படும் நிமித்தங்கள் சகுனம் ஆகும்.

தசரதன் மிதிலையில் சில நாட்கள் தங்கி பின்னர் அயோத்திக்குப் புறப்பட்டுச் சென்றான். அப்போது சில தீய நிமித்தங்கள் தோன்றின.

**ஏகும் அளவையின் வந்தன.**
**வலமும் மயில். இடமும்**
**காகம் முதலிய. முந்திய**
**தடை செய்வன் கண்டான்**
**நாகம் அனன். 'இடை இங்கு உளது**
**இடையூறு' என நடவான்**
**மாகம் மணி அணி தேரொடு**
**நின்றான். நெறி வந்தான்.**

மயில்கள் இடமிருந்து வலமாகச் சென்றன. முதலில் இது நல்ல நிமித்தம். அடுத்து காகங்கள் வலமிருந்து இடமாகச் சென்றன. இது தீய சகுனமாக இருந்ததால் தசரதன் தயங்கி நின்றான் இதன் பலன் கேட்டு அதன்பின்தான் பயணம் தொடர்கிறான் என்று



குறிப்பிடுகிறார் கம்பர்.

கீதையின் ஆரம்பத்தில் யுத்தம் ஆரம்பிக்குமுன் அர்ஜுனன் கிருஷ்ணனிடம் சொல்கிறான்: "விபரீதமான நிமித்தங்களைப் பார்க்கிறேன்".

குமரிக் கோட்டம் என்ற படத்தில் வாலி எழுதிய பாடல் (இசை எம்.எஸ்.விஸ்வநாதன் பாடியவர்கள் டி.எம்.எஸ், எல்.ஆர்.ஈஸ்வரி) பெண்ணுக்கு இடது கண் துடித்தால் நல்ல சகுனம் என்பதை சொல்கிறார்.

**'நாம் ஒருவரை ஒருவர் சந்திப்போம்**
**என காதல் தேவதை சொன்னாள்**
**என் இடது கண்ணும் துடித்தது**
**உனைக் கண்டேன் இந்நாள் பொன்னாள்'**

வைரமுத்து முதல்வன் படத்தில் உளுந்து வெதைக்கயிலே என்ற பாடலில் (இசை ஏ.ஆர். ரஹ்மான் பாடியவர்கள் ஸ்வர்ணலதா, ஸ்ரீநிவாஸ்) நல்ல சகுனங்களை பட்டியல் போடுகிறார்.

**'உளுந்து வெதைக்கயிலே சுத்தி**
**ஊதக்காத்து அடிக்கயிலே**
**நான் அப்பனுக்குக் கஞ்சி கொண்டு**
**ஆத்துமேடு தாண்டிப் போனேன்**
**கண்ட நல்ல நல்ல சகுனத்தில்**
**நெஞ்சுக்குழி பூத்துப் போனேன்'**

என்னென்ன நல்ல சகுனங்கள் சொல்கிறார் பாருங்கள்:

**'வைக்கல்படப்பில் கவுளி கத்த**
**வலது பக்கம் கருடன் சுத்த**
**தெருவோரம் நிறைகுடம் பார்க்கவும்**
**மணிச்சத்தம் கேட்கவும் ஆனதே**
**ஒரு பூக்காரி எதிரே வர**
**பசும் பால்மாடு கடக்கிறதே'**

இப்படி எல்லா நல்ல சகுனங்களும் சேர்ந்து வந்தால் என்னாகும்? தெய்வம் நம் வீடு தேடி வந்து வரம் தரும் என்கிறார்.

"இனி என்னாகுமோ ஏதாகுமோ
இந்த சிறுக்கி வழியில்
தெய்வம் புகுந்து வரம் தருமோ".

# சின்னச் சின்ன...

**இளஞ்சிவப்பு ஊர்**

ஜப்பானில், ஒக்கைடு என்ற மலைப்பிரதேசத்தில் உள்ளது, டேக்கினோயி பூங்கா. இங்கு, மே மற்றும் ஜூன் மாதங்களில், எங்கு பார்த்தாலும், இளஞ்சிவப்பு நிறமாக காணப்படும்.

காரணம், அச்சமயத்தில், ஷிபா சகுரா எனும் இளஞ்சிவப்பு நிற பூக்கள் பூத்து, அந்த மலைப்பகுதி முழுவதும், கம்பளம் விரித்தது போன்று காணப்படும். இதன் அழகைக் கண்டு களிக்க, உலகின் பல பகுதிகளிலிருந்தும், சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர்.

**பூக்களின் நாடு**

உலகிலேயே பலவகையான வண்ண வண்ணப் பூக்கள் உற்பத்தி செய்யப்படும் நாடு நெதர்லாந்து. இந்நாட்டில் 520 வகையான மலர்வகைகள் பயிரிடப்பட்டு உற்பத்தியாகின்றன. இதனால் நெதர்லாந்திற்கு "பூக்களின் நாடு" என்று ஒரு சிறப்புப் பெயர் உள்ளது.

**27 தீவுகள்**

இலட்சத் தீவு என்று அழைக்கப்படும் தீவுக் கூட்டத்தில் 27 தீவுகள் மட்டுமே உள்ளன. 18ஆம் நூற்றாண்டில் இந்த தீவுகளை திப்புசுல்தானிடமிருந்து ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். அதிலிருந்து இந்தத் தீவுகள் "இலட்சத் தீவுகள்" என்று அழைக்கப்படுகின்றன.

**பச்சி போடியம்**

பெயரைப் பார்த்ததும், இதென்ன என குழம்பாதீர்கள். இது ஒரு வகைச் செடியினம். தென் ஆபிரிக்க பாலைவனங்களில் காணப்படுகிறது இந்தச் செடி, இதன் தண்டு எப்போதும் வடக்குத் திசை பக்கமே சாய்ந்து நிற்கும். இதன் காரணமாக இந்தச் செடிக்குத் "திசை காட்டும் செடி" என்று பெயர். பாலைவனங்களில் பயணம் மேற்கொள்பவர்கள் இந்தச் செடியைத் திசைகாட்டும் கருவியாகப் பயன்படுத்தி வடக்குத் திசையை முதலில் அறிந்து கொள்வார்கள்.



**நாயும் நிலநடுக்கமும்**

நேப்பிள்ஸ் நகரத்தில் ஒருமுறை, தெருநாய்களும், வீட்டில் வளர்க்கப்படும் செல்ல நாய்களும், ஓயாது ஊளையிட்டுக் கொண்டிருந்தன. இக் கூச்சலைப் பொறுக்க முடியாத மக்கள், நாய்களைத் தடியால் அடித்து ஊளையிடுவதை நிறுத்தினர். இது முடிந்து ஒரு சில மணிநேரத்தில், அங்கு மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சி 1783-ஆம் ஆண்டு நடந்துள்ளது.

**ஓபரா ஹவுஸ்**

அவுஸ்திரேலியாவில் சிட்னி "ஓபரா ஹவுஸ்" கட்டடக் கலையின் அற்புதங்களில் ஒன்று. ராட்சத வண்ணத்துப்பூச்சி தன் இறக்கைகளை விரித்தபடி உட்கார்ந்திருப்பதுபோல இருக்கும். கிளிஞ்சல்களை நிமிர்த்தி வைத்தது போன்று கொங்கிரீட்டினால் உருவாக்கப்பட்டுள்ள இக் கலைக்கூடத்திற்கு வடிவமைத்தவர் ஜோரான் வுட்சான் என்பவர். இதில் 72,000 சதுர அடி கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்டுள்ளன.

**4,223 தீவுகள்**

ஜப்பான் என்பது 4,223 தீவுகளின் கூட்டம். இதில் ஹோன்ஷி, ஷிகோடை, க்யூஷி, ஹொகைடோ என்ற நான்கு தீவுகள்தான் மிகப் பெரியவை. இதில் ஹோன்ஷி தீவில்தான் ஜப்பானின் தலைநகரான டோக்கியோ அமைந்துள்ளது. இதுதவிர உண்மையில் 600 தீவுகள்தான் மக்கள் வசிக்க ஏற்றனவாக உள்ளன.

**ஒரே மாதிரி**

அமெரிக்காவின் கலிபோர்னியா, பிரான்சின் வெர்சேல்ஸ், இத்தாலியின் பிளாரன்ஸ், ஸ்பெயினின் மேற்பகுதி இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் பழங்களின் வளர்ச்சியும் தன்மையும் ஒரேமாதிரி உள்ளன. ஏனெனில் இவற்றின் தட்ப வெப்பநிலை ஒரே மாதிரியாக அமைந்துள்ளது.

**கதவில்லாத வீடுகள்**

இந்தியாவிலுள்ள ஒரிசாவில் கடற்கரைப் பகுதியை அண்டியுள்ள ஒரு கிராமத்தில் 80 வீடுகள் ஒரே வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகளுக்கு கதவுகளோ, ஜன்னல்களோ கிடையாது. இதுவரை எந்தத் திருட்டும் நடந்ததில்லை. இந்தக் கிராமத்தை அருகில் உள்ள கிராம மக்கள் "கதவில்லா கிராமம்" என்றே அழைக்கிறார்கள்.

**கங்காருகளில் 150 வகை**

அவுஸ்திரேலியாவில் மட்டும் அதிகம் காணப்படும் கங்காருகளில் 150 வகைகள் உண்டு. ஆறு அடி உயரமுள்ள பிக்ரெட்டிலிருந்து, முயல் அளவே உள்ள பெர்னடைன் வரை உள்ளன. இங்கு காணப்படும் கோலாக் கரடிகள் பில்லிபுளூகம் என்ற பெயருள்ளவை. இவை யூகலிப்டஸ் மரத்தின் இலைகளை மட்டுமே தின்று வாழக்கூடியவை.

# அற்புத உலகில் ஆலிஸ் 2

ஆங்கில மூலம் : லூயிஸ் கரோல்
தமிழில் : சுகுமாரன்

ஆலிஸ் இப்போது உயரமாக வளர்ந்து கொண்டிருந்தாள். "கால்களே, குட் பை" என்று சொல்லுமளவிற்கு, கண்களால் காண முடியாத உயரத்திற்கு அவள் கால்கள் வளர்ந்துவிட்டன. இனி கால்களுக்கு சப்பாத்தும் காலுறைகளும் கைகளால் போட முடியாது என்று நினைத்தாள்.

அவளுடைய தலை மேற்புறமிருந்த கூரையில் இடிபட்டது. ஆலிஸ் ஒன்பது அடி உயரத்திற்கு மேல் வளர்ந்துவிட்டாள். தங்கச்சாவியை அவளால் எடுக்க முடிந்தது. கதவைத் திறந்து அவளால் தோட்டத்திற்கு போக முடியவில்லை.

ஆலிஸக்கு அழுகை வந்தது. அவளால் அழுகையை நிறுத்த முடியவில்லை. அழுது அழுது கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் கொட்டியது. லீற்றர் கணக்கில் கண்ணீர் கொட்டிக்கொண்டே இருந்தது. அவளைச் சுற்றி பெரிய கண்ணீர்க்குளமே உருவாகிவிட்டது. அந்தத் தளத்தில் பாதி அளவு நிரம்பிவிட்டது.

ஆலிஸக்கு அழுவது பிடிக்கவில்லை. அவள் அழுகையை நிறுத்த நினைத்தாள். அப்போது அந்த முயல் மீண்டும் அவள் அருகே வந்தது. "ஹலோ, முயலே நில்லுங்கள்" என்று அழைத்தாள்.

அவளைப் பார்த்ததும் திடுக்கிட்ட அந்த முயல் அதனுடைய கையுறைகளையும் விசிறியையும் கீழே போட்டுவிட்டு ஓடியது.

அவள் அந்த கையுறைகளையும் விசிறியையும் எடுத்தாள். அந்த இடம் காற்றோட்டம் இல்லாமல் இருந்ததால் வெப்பமாக இருந்தது. அதனால் விசிறியால் வீசினாள். வீசும்போதே அவள் தன்னைப் பற்றி பலவாறாக நினைத்துக் கொண்டாள். அவள் மீண்டும் சிறியவளாகிவிட்டதை முதலில் அவள் அறியவில்லை. மேசையின் அருகில் சென்று பார்த்தபோதுதான் தெரிந்தது. ஆலிஸ் இப்போது இரண்டு அடி உயரம்தான் இருந்தாள். ஆமாம், எப்படி இது நடந்தது?" இதற்குக் காரணம் விசிறிதான். இன்னும் சிறியவளாகிவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தினால் ஆலிஸ் விசிறியைக் கீழே போட்டாள்.

அவள் சிறியவளாகி விட்டதால் குட்டிக் கதவைத் திறந்து தோட்டத்திற்குப் போகலாம் என்று நினைத்தாள். மேசை மீதிருந்த சாவியை எடுக்க முடியாத அளவுக்கு அவள் சிறியவளாகி விட்டாள்.



மேசை மீது ஏறி வழுக்கி விழுந்தாள். அவள் விழுந்தது கடலில். அதாவது, ஆலிஸ் வடித்த கண்ணீர் கடலில், அது அவளுக்கு கழுத்தளவு இருந்தது. அதில் நீந்திக் கரை சேர நினைத்தாள்.

அப்பொழுது நீரில் ஏதோ வந்து விழுந்தது. முதலையாகவோ, நீர் யானையாகவோ இருக்குமோ என்று நினைத்தாள். ஆனால், அப்படி எதுவும் இல்லை. நீரில் விழுந்தது ஒரு சுண்டெலிதான்.

அந்த எலியிடம் பேசலாம் என்று ஆலிஸ் நினைத்தாள். "ஏ, சுண்டெலி, இங்கிருந்து வெளியே போகும் வழி உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

சுண்டெலி அவளுக்குப் பதில் சொல்லவில்லை. அவளை அலட்சியமாகப் பார்த்துவிட்டு கண்ணை மூடிக்கொண்டது.

ஒருவேளை, தான் பேசிய மொழி சுண்டெலிக்குப் புரியவில்லையோ என்று நினைத்தாள். ஆலிஸக்குத் தன்னுடைய பூனை டினாவின் நினைவு வந்தது. டினா பூனை கத்துவதுபோல் கத்திப் பார்த்தாள். அதைக் கேட்டதும் சுண்டெலிக்குப் பயத்தால் நடுக்கம் வந்தது.

"நான் பூனைகளை வெறுக்கிறேன்" என்று சுண்டெலி மிக கோபமாகக் கூறியது.

"இல்லை, நீ கோபப்படாதே!" என்று ஆலிஸ் சுண்டெலியைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

"என்னுடைய டினா பூனை நல்ல பூனை. அப்பிராணி. நீ அதைப் பார்த்தால் புரிந்துகொள்வாய்" என்று ஆலிஸ் சுண்டெலியிடம் கூறினாள்.

ஆனால் ஆலிஸின் பேச்சைக் கேட்டு சுண்டெலி மேலும் பயந்தது.

"சரி, நாம் டினாவைப் பற்றிப் பேச வேண்டாம்" என்றாள் ஆலிஸ்.

நடுங்கிக் கொண்டிருந்த சுண்டெலி கூறியது: "நாம் பேச வேண்டாமா? நானா டினாவைப் பற்றி பேசினேன்?"

"இல்லை. இனி நான் பேச மாட்டேன்" என்று கூறிய ஆலிஸ், பேச்சை மாற்ற வேண்டும் என்ற நினைப்பில் "உனக்கு நாய்களைப் பிடிக்குமா?" என்று கேட்டாள்.

சுண்டெலி எதுவும் பேசாமல் அவளை விட்டு விலகி நீரில் நீந்தியது. அதைப் பார்த்த ஆலிஸ், "உனக்கு பூனை, நாய் என்றால் இவ்வளவு பயம் இருக்கிறதே, அது தெரியாமல் பேசி விட்டேன். என்னை விட்டுப் போகாதே. அருகில் வா" என்று அழைத்தாள்.

சுண்டெலி மெதுவாக அவளருகே நீந்தி வந்தது. "நாம் முதலில் கரையை அடைவோம். அதற்குப் பிறகு பேசுவோம்" என்றது.

அவர்கள் கரையை அடைவதற்குள் அந்தக் கண்ணீர் குளத்தில் நிறைய பறவைகள் வந்து விழுந்தன. டோடோ என்ற கழுத்து குறுகிய, கால்கள் குட்டையான ஒரு பறவையும் லோஹி என்ற கிளியும் ஆலிஸுக்கு அறிமுகம் ஆனார்கள்...

(தொடரும்...)




## பொன் மொழிகள்

- செயல் புரிபவர் அனைவரும் சிந்திப்பவர்களின் அடிமையே.
- ஒரு மனிதனின் சிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்களே.
- கல்வி கற்பது ஒரு பணியோ சிக்கலோ சுமையோ அல்ல. உலகில் வாழ அது ஒரு வழி.
- மனிதன் சிரிக்கக்கூடிய நிலையில் இருக்கும் வரை அவன் ஏழையாக மாட்டான்.
- உலகில் கூறப்படும் அழகான கருத்துக்கள் அனைத்தும் ஒரு நல்ல செயலுக்கு ஈடாகாது.
- அளவுக்கு அதிகமான ஓய்வு மிதமிஞ்சிய வேதனையாகும்.
- பிறந்ததற்காக அழும் குழந்தை அறிவுள்ளது தான்.

## விடுகதைகள்

1) அடித்துக் கொள்வார்கள் , ஆனால் சண்டையல்ல - அது என்ன?

2) எங்கள் வீட்டு ஆலமரம் வெட்ட வெட்ட வளருது - அது என்ன?

3) வந்ததுதான் வந்தீர்களே! வந்து ஒரு தரம் போனீர்களே போய் ஒரு தரம் வந்தீர்களே! இனிப் போனால் வருவீர்களா? அவை என்ன?

4) அடாபுடா என்பான், ஆனால் வீட்டை விட்டு வெளியே வர மாட்டான் அது என்ன?

5) சிவப்பு ராஜாவைச் சுற்றி வெள்ளைச் சிப்பாய்கள் அவை யாவை?


**விடைகள்**

1) கண் இமைகள் 2) முடி
3) பல் 4) நாக்கு
5) நாக்கு, பல்

## பொம்மலாட்டம்




*உயிரற்ற பொம்மைகூட*
*உயிருள்ள*
*உறவாய்த் தெரிகிறது-*
*குழந்தைக்கு...!*
*வளர்ந்து விட்ட பின்பு-*
*உயிருள்ள மனித*
*உறவுகளெல்லாம் தெரிகிறது -*
*உயிரற்ற பொம்மைகளாய்...!*



## புராணங்களை இயற்றியவர்கள்

1. இலிங்க புராணம் - வரகுண ராம பாண்டியர்
2. கூர்ம புராணம் - அதிவீர ராம பாண்டியர்
3. வினாவிடை புராணம் - புராணத் திருமலைநாதர்
4. தசபுராணம் - அப்பர்
5. சிவபுராணம் - மாணிக்கவாசகர்
6. அருணகிரி புராணம் - புராணத் திருமலைநாதர்
7. பெரிய புராணம் - சேக்கிழார்
8. அருணாசல புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
9. இறைசை புராணம் - புராணத் திருமலைநாதர்
10. சிதம்பர புராணம் - புராணத் திருமலைநாதர்
11. சுந்தரபாண்டிய புராணம் - அனதாரி
12. செவ்வந்தி புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
13. சேது புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
14. திருக்காளத்திப் புராணம் - ஆனந்தக் கூத்தர்
15. திருச்செங்காட்டங்குடி புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
16. திருப்பட்டீசுரம் புராணம் - ரேவண சித்தர்
17. திருப்பரங்கிரிப் புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
18. திருமழபாடி புராணம் - கமலை ஞானப் பிரகாசர்
19. திருமேற்றளி புராணம் - ரேவண சித்தர்
20. திருவலஞ்சுழி புராணம் - ரேவண சித்தர்
21. திருவா'ரூர்ப் புராணம் - அளகை சம்பந்த முனிவர்
22. திருவானைக்காப் புராணம் - கமலை ஞானப்பிரகாசர்
23. திருவிரிஞ்சைப் புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
24. திருவெண்காடு புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
25. திருவெற்றியூர்ப் புராணம் - திருவெற்றியூர் ஞானப்பிரகாசர்
26. திருவையாறு புராணம் - ஞானக்கூத்தர்
27. புலவர் புராணம் - தண்டபாணி சுவாமிகள்
28. தீர்த்தகிரி புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
29. வேணுவனம் புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
30. கமலாலயப் புராணம் - மறைஞான சம்பந்தர்
31. சரப புராணம் - புராணத் திருமலைநாதர்
32. சைவமகா புராணம் - புராணத் திருமலைநாதர்
33. ததீசி புராணம் - புராணத் திருமலைநாதர்
34. திருத்தொண்டர் புராணம் - சேக்கிழார்
35. திருவிளையாடல் புராணம் - பெரும்பற்றப்புலியூர் நம்பி
36. திருமுறை கண்ட புராணம் - உமாபதி சிவம்
37. சேக்கிழார் புராணம் - உமாபதி சிவம்
38. கோயிற்புராணம் - உமாபதி சிவம்
39. மேருமந்தர புராணம் - சமய திவாகர வாமன முனிவர்
40. திருவாதவூர் அடிகள் புராணம் - கடவுள் மாமுனிவர்
41. விநாயக புராணம் - கச்சியப்ப முனிவர்
42. காஞ்சி புராணம் - சிவஞான முனிவர்
43. தேவயானைப் புராண்ம் - நல்லாப் பிள்ளை
44. அருணாச்சலப் புராணம் - சிவப்பிரகாச சுவாமிகள்
45. தணிகைப் புராணம் - கச்சியப்ப முனிவர்
46. சீறாப் புராணம் - உமறுப் புலவர்
47. அரிச்சந்திர புராணம் - வீரகவிராயர்

## எது மதிப்புடையது?



பல நாடுகளைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்த ஒரு பேரரசர். அவருக்கு ஆலோசனைகள் கூற பல மந்திரிகள் இருந்தனர். அரசருக்குப் பணிவிடை செய்ய சேவகன் ஒருவன் இருந்தான். அரசர் அந்தச் சேவகனிடம் அளவு கடந்த அன்பு வைத்திருந்தார். அரசர் சேவகனிடம் கொண்ட அன்பைச் சகிக்காத மந்திரிகள் அவன் மேல் பொறாமை கொண்டார்கள்.

அறிவுக்கரிய பல ஆலோசனைகள் கூறும் நம்மிடம் காட்டாத அன்பை, ஒரு சேவகனிடம் போய் அரசர் காட்டுகிறாரே என்ற எரிச்சலும் அவர்களுக்குள் இருந்தது.மந்திரிகள் இவ்வாறு பொறாமைப்படுவது அரசருக்குத் தெரிய வந்தது. மந்திரிகளுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்று அரசர் திட்டமிட்டார். அரசவையைக் கூட்டினார். அவைக்கு மந்திரிகள் அனைவரும் வந்திருந்தனர்.

அரசரின் சிம்மாசனத்துக்கு முன்பாக மிகவும் விலை உயர்ந்த ஒர் இரத்தினக் கல்லும், ஒரு சுத்தியலும் வைக்கப்பட்டிருந்தது.அரசர் தமது முதல் மந்திரியை அழைத்தார்.அரசர் அவரிடம், அந்த சுத்தியலை எடுத்து பெரும் மதிப்புள்ள இரத்தினக்கல்லை உடையுங்கள் என்றார். முதல் மந்திரி, விலை மதிப்பற்ற இரத்தினக்கல்லை உடைத்தால் அது பயனில்லாமல் போய்விடுமே? என்று யோசித்தபடி அப்படியே நின்று விட்டார்.அரசர் அவரை அவரது இருக்கைக்குச் செல்லும்படி சொன்னார். முதல் மந்திரியும் அவர் இருக்கையில் சென்று அமர்ந்தார்.

அரசர் அடுத்த மந்திரியை அழைத்து இரத்தினக்கல்லை உடைக்கக் கட்டளையிட்டார். முதல் மந்திரியே இரத்தினக் கல்லை உடைக்காத போது அவர் உடைப்பாரா? அவரும் உடைக்காமல் திரும்பி விட்டார். இப்படியே, அரசவையிலிருந்த மந்திரிகள் எவரும் அந்த இரத்தினக்கல்லை உடைக்கத் துணியவில்லை.எல்லோருடைய சிந்தனையிலும் அந்த இரத்தினக்கல்லின் மதிப்பே முதன்மையாகத் தெரிந்தது.இறுதியாக அரசர் தனது சேவகனை அழைத்து, இரத்தினக்கல்லை உடைக்கும்படி கட்டளையிட்டார்.

அரசரின் வாயிலிருந்து கட்டளை பிறந்தவுடன், அவன் எவ்விதத் தயக்கமுமின்றி சுத்தியலை எடுத்து இரத்தினக்கல்லை உடைத்தான். இதைப் பார்த்த மந்திரிகள் அனைவரும், அட முட்டாளே! விலைமதிப்புள்ள இரத்தினக்கல்லை இப்படி உடைத்து வீணாக்கி விட்டாயே? என்று சத்தம் போட்டனர். அந்த சேவகன் எவ்வித பதட்டமுமில்லாமல், மந்திரிகளே, தாங்கள் விலைமதிப்புள்ள இரத்தினக்கல்லை உடைத்ததைப் பார்த்து, அது வீணாகிப் போய்விட்டதே என்று கவலைப்படுகிறீர்கள்... நான் அப்படியில்லை, இந்த இரத்தினக்கல்லை விட நம் அரசரின் சொல்லையே மதிப்புள்ளதாக நினைக்கிறேன். அவர் எதைச் சொன்னாலும், அதைச் செய்வதே என்னுடைய பணி என்றான். அரசன் மந்திரிகளைப் பார்த்து பார்த்தீர்களா!... இதனால் தான் இவன் மேல் எனக்கு அன்பு அதிகம்.. உண்மைச் சேவகனுக்கு இதுவே அழகு.

# வளர்ச்சிக்காக போராடுபவர்களே உண்மையான மக்கள் பிரதிநிதிகள்

## ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



தேர்தல்களில் வெற்றி பெற்று மக்கள் பிரதிநிதியாவது மட்டும் முக்கியமானதல்ல. அந்த வெற்றி மூலம் தமது பகுதியையும் மக்களையும் வளர்ச்சியடையச் செய்ய போராடுபவர்களே உண்மையான மக்கள் பிரதிநிதிகள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

கொடிகாமம் வெள்ளாம் போக கட்டி மக்களது வாழ்வாதார மேம்பாட்டை ஆராயும் முகமாக அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பு பொருளாதார அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தமிழ் மக்களின் தலைவர்கள் எனக் கூறுபவர்களது அரசியல் நகர்வுகள் சுயநலம் கலந்ததாகவும் வர்க்கபேதத்துடன் கூடிய பாகுபாடானதாகவும் காணப்படுவதனால் வருங்கால தமிழர்களது அரசியல் முன்னேற்றங்கள் யாவும் தவறானதாகவே நகர்த்தப்படவுள்ளன. இதை மாற்றியமைக்க தமிழர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்பது தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

பல்லாயிரம் உயிர்களையும் உடைமைகளையும் பறிகொடுத்து தமிழர்களது ஒரு சந்ததியை அபிவிருத்தியிலும் அரசியலிலும் அழிந்துபோக வைத்த போராட்டத்தின் பிடியிலிருந்த தமிழ் மக்கள் அனைவரும் மீள வேண்டும் என்பதை மையமாக கொண்டுதான் தமிழர் அனைவரது செயற்பாடுகளும் அமைய வேண்டும்.

கடந்த தேர்தலில் கூறிய எவற்றையும் நடைமுறைப்படுத்தாமையால் தமிழ்த்தேசியம் கூறுபவர்கள் இனி மக்களிடமிருந்து ஒதுங்கி விடுவார்கள் என்று நினைத்துவிடக்கூடாது. அவர்கள் ஒவ்வொரு அரசியற் பருவ காலத்திலும் மக்களை ஏமாற்றுவதற்காக பல புதிய வியூகங்களைத் திரட்டி வைத்திருப்பார்கள். வரவுள்ள சந்தர்ப்பத்தையாவது எங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொள்ள சரியான தலைமையை தேர்ந்தெடுக்க தமிழ் மக்கள் தங்களை தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும்..

இச் சந்திப்பில் சாவகச்சேரி அமைப்பாளர் சாள்ஸ், நகரசபை உறுப்பினர் திருக்குமரன், மெடிஸ்கோ, செந்தூரன், சமுர்த்தி உத்தியோகத்தர் கல்பனா, ஆகியோருடன் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

# பளை புலோப்பளை வீதி நீண்டகாலத்தின் பின் புனரமைப்பு



(பளை)

நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதிருந்த பளைநகர் புலோப்பளை வீதியானது தற்போது புனரமைக்கப்பட்டுவருகிறது.

பத்து இலட்சம் ரூபா செலவில் குறிப்பிட்டளவு தூரம்மட்டும் புனரமைக்கப்படுகின்றது. இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனம். மற்றும் திட்டங்கள் தொடர்பான எவ்வித அறிவித்தல்களையும் வெளிப்படுத்தவில்லை.

நவலோக ஒப்பந்த நிறுவனம். அல்லிப்பளையில் முன்னெடுக்கப்படும் காற்றலை மின்னுற்பத்திக்குத் தேவையான பொருட்களைக்கொண்டு செல்வதற்காக இவ் வீதிக்கு கிரவலை போட்டு ஓரளவு செப்பனிட்டிருந்த அவற்றுக்கு மேல் தற்போது யாழ்ப்பாணத்தின் வெள்ளைக் கற்கள் அடுக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் வரையான இந்த வீதியில் சுமார் 100அல்லது 150 மீற்றர் வரையான பகுதியே தற்போது திருத்தியமைக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியை பளை, புலோப்பளைகிழக்கு, மேற்கு, அல்லிப்பளை, அறத்திநகர், போன்ற கிராம மக்கள் பாவிப்பதுடன்.அதிக பாரஊர்திகளையும் பாவிப்பதால் தரமற்ற மூலப் பொருள்களை கொண்டு இவ்வீதியை புனரமைக்காது. தரமான முறையில் புனரமைக்க உரியவர்கள் முன்வரவேண்டும் என மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (37)



இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு வவுனியா இலங்கை வங்கிக்கிளையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை வங்கி முகாமையாளர் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இவ் வைபவத்தில் சர்வமதத் தலைவர்களும் பிரதம விருந்தினராக கல்வியியற் கல்லூரி பீடாதிபதியும் சிறப்பு விருந்தினராக வர்த்தக சங்க தலைவர், செயலாளர், மற்றும் வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர். (70)

# பதிவிறக்கப் பெட்டகம்

சுயத்தை எழுதுவது என்கிற சிந்தனை ஒரு மறுமலர்ச்சி கால வெளிப்பாடு. ஆனால் அப்போதே 'யூம் போன்றவர்கள் சுயம் என ஒன்று உள்ளதா என்கிற கேள்வியை எழுப்பினார்கள். சுயத்தை அறிதல் என்பது எல்லா அறிதல்களையும் போலவே முழுமையானதல்ல. அது தற்காலிகமானதே, சுயம் பற்றிய நமது அறிவும் எல்லா அறிவுகளையும் போல மாறிக்கொண்டிருப்பதே. சுயம் என்பது தன்னளவில் இயற்கையானதோ, முழுமையானதோ கூட அல்ல. அதுவும் எல்லாவற்றையும் போலச் சிதைந்ததுதான் (fragmented): கட்டமைக்கப்பட்டதுதான் (constructed). அதனால்தான் பின்நவீனச் சிந்தனையாளர்கள் இப்படிச் சுயம் சார்ந்து எழுத நேர்ந்த போதெல்லாம் ஒரு வகை தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் எழுத்து வழிவைக் கையாண்டார்கள்.

ஆனால் சுயம் சார்ந்த எழுத்துக்கள் மீது எழுதுபவர்களுக்கும் வாசிப்பவர்களுக்கும் ஒரு நாட்டம் இருந்து வரத்தான் செய்கிறது. தன்னைக் காட்சிப்படுத்திக் கொள்வது (display) என்பதில் எழுதுகிறவர்களுக்கு எப்போதும் ஒரு விருப்பு இருந்து வந்துள்ளது. அதே போல மற்றவர்களின் சுயத்திற்குள் எட்டிப் பார்க்கும் ஆவலும் எப்போதும் வாசிப்பவர்களுக்கு இருந்து வந்துள்ளது. யோசித்துப் பார்த்தால் இரண்டுமே ஒரு வகையில் நாகரீகமற்ற செயலாகத்தான் தோன்றுகிறது.

நாவல்கள் உருவாவதற்கு முன்னர் டயரிகள், நினைவுகள் (Diaries / Memories) எழுதும் வழக்கம் முதன்மை பெற்றிருந்தது. அனந்தரங்கம் பிள்ளை முதலானோரின் புகழ் பெற்ற நாட்குறிப்புகளை நாம் அறிவோம். நாவல் வடிவம் உருவான பின் பலரும் தன் சுயம் சார்ந்த நினைவுகளை புனைவிற்குள் பொதிந்து வெளிப்படுத்தும் நிலை உருவாகிற்று.

இப்போது இணைய யுகத்தில் எல்லோரும் வாசிக்கக் கூடிய ஒரு டயரியைப் போல தனி நபர்களுக்குச் சொந்தமான 'ப்ளொக்'கள், இணையத் தளங்கள், முகநூல் முதலான ஊடகங்கள் வாய்க்கப் பெற்றுள்ளன. யாருடைய தணிக்கையும் இன்றி வேண்டும் போது வேண்டுவதை எழுதலாம் என்கிற வகையில் இவை டயரிகளை ஒத்துள்ளன; யார் வேண்டுமானாலும் வாசிக்க இயலும் என்கிற வகையில் அவை ஒரு வெளியீட்டு வடிவமும் காண்கின்றன.

ஆக தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆசை, மற்றவர்களின் வாழ்வை எட்டிப் பார்க்கும் விருப்பு என்பன இந்தப் புதிய வடிவில் எளிதாகச் சாத்தியமாகி விட்டன.

நினைவுகளை வெளிப்படுத்துவது என்கிற வாய்ப்பு இல்லாதவர்களும் கூட நினைவுகளை அசைபோடத் தவறுவதில்லை. எவ்வளவு துயரான அனுபவங்களாயினும் காலம அந்தத் துயர்களுக்கு ஆறுதல் அளிக்கிறது; துயர்சாரா நினைவுகளை மிகைப்படுத்தி உதவுகிறது. ஆக ஒவ்வொரு நினைவும் காலத்தால் புடம்போடப்பட்டு அது நிகழ்ந்த காலத்தில் ஏற்படுத்திய அனுபவத்தைக் காட்டிலும் புதிய பரிமாணம் கொள்கிறது. பழைய அனுபவத்தை மீண்டும் ஒரு முறை எட்டி, அதை அப்போது நாம் எதிர்கொண்ட விதத்தை ஒரு மறு பரிசீலனைக்குள்ளாக்கவும் நினைவுகளை அசைபோடுதல சாத்தியமாக்குகிறது.

நினைவுகளை மற்றவர்களோடு பகிர்வதில் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் அடிப்படை மனித உந்தல் ஒரு புறம் எனில், அப்படி பகிரப்படாத நினைவுகள் உருவாக்கும தனிமை சுமை மிக்கது. அந்தச் சுமையை இறக்கி வைக்க மனித மனம் ஆசைப்படுகிறது.... – அ.மார்க்ஸ்

இணையத்தில் எழுதுபவர்களிடம் என்னால் நல்ல தமிழைப் பார்க்க முடியவில்லை. அதில் எழுதும் சிலரது கருத்துக்களும் பார்வைகளும் உள்ளடக்கமும் அபாரமான வீச்சு கொண்டவை என்றாலும் அவர்களுடைய மொழி இன்னும் மாற்றம் அடைய வேண்டும். தேவையில்லாத ஆங்கிலக் கலப்பு இன்றைய இணைய எழுத்தாளர்களின் மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. நல்ல தமிழ் எழுதக் கற்றுக் கொள்ளுங்கள். அதுதான் என் முதல் வேண்டுகோள். அடுத்து, ந.முத்துசாமி, க.நா.சு., நகுலன், கரிச்சான் குஞ்சு, தி. ஜானகிராமன், அசோகமித்திரன், எம்.வி. வெங்கட்ராம், ப. சிங்காரம், மௌனி, இந்திரா பார்த்தசாரதி போன்ற எழுத்தாளர்களை வாசியுங்கள். இவர்களை வாசிக்காமல் எழுத வருவது என்பது என் தந்தையை நான் இன்னும் சந்தித்தது இல்லை என்று சொல்வதற்கு ஒப்பானது.

– சாரு நிவேதிதா

# இல்லாமையை இல்லாது ஆக்குவோம் அபிவிருத்தியும் அரசியலும் எம் நோக்கு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



சுயலாப அரசியல்வாதிகளின் எதிர்ப்பரசியலால் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் மக்கள் இருந்ததையும் இழக்க வேண்டிய நிர்ப்பந்தமே ஏற்பட்டது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சங்கானையில் புதிய மீன் சந்தைக்கான அடிக்கல்லை கடந்த சனிக்கிழமை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்தியையும் அரசியலையும் சமாந்தரமாக முன்னெடுப்பதற்கு எமது இணக்க அரசியல் சாதகமாகவுள்ளது.

அந்தவகையில் தான் இணக்க அரசியல் ஊடாக நாம் சாதுரியமாக அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்பதுடன் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

சுயலாப அரசியல்வாதிகள் நீண்டகாலமாக எதிர்ப்பரசியலை முன்னெடுத்து வரும் நிலையில் அவர்களால் எவ்விதமான அபிவிருத்திகளையும் முன்னெடுக்க முடியாது என்பதுடன் எதனையும் பெற்றுக் கொள்ளவும் முடியாது.

மாறாக இருந்ததையும் மக்கள் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்தையை நிர்மாணிப்பதற்கு பல எதிர்ப்புக்கள் இருந்த போதிலும் சரியான அணுகுமுறையூடாகவே இப்புதிய கட்டடம் அமையப் பெறவுள்ளது.

எதிர்காலத்திலும் இவ்வாறான அணுகுமுறைகள் கையாளப்படும் போது நிச்சயம் பல எதிர்ப்புக்களையும் வெல்ல முடியுமெனத் தெரிவித்த அமைச்சர் எதிர்காலத்தில் இப்பேறப்பட்ட எதிர்ப்புக்கள் எதிர்கொள்ளப்படும் போது மக்கள் ஒன்றிணைந்த ஆதரவை வழங்கும் பட்சத்தில் அவற்றை வெற்றி கொள்ள முடியுமென்றும் தெரிவித்துள்ளார். சங்கானை பட்டின அபிவிருத்தி சபைத் தலைவர் சிவதுட் சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் உரையாற்றினார்.

முன்னதாக இப்புதிய மீன்சந்தைக்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு சங்கானை பிரதான வீதியிலிருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் நிகரை ஞானவைரவர் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்ட அமைச்சர் சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன் அங்கிருந்து ஊர்வலமாக நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து புதிய மீன் சந்தைக்கான கட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

அமையப் பெறவுள்ள இச்சந்தைக்காக 8 பரப்புக் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் ஆறு பரப்புக் காணியை சங்கானை பட்டின அபிவிருத்தி சபை கொள்வனவு செய்து சங்கானை பிரதேச சபைக்கு வழங்கியுள்ள நிலையில் இரண்டு பரப்புக் காணியை முருகானந்தன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இச்சந்தை 32 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாகாண விவசாய திணைக்களப் பணிப்பாளர் பற்றிக் டிறஞ்சன், சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) பிரதேச சபை செயலாளர் திருமதி சாரதா உருத்திரசாம்பவன் வர்த்தக சங்கத் தலைவர் குணசேகரம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பொன்னாலை கிருஸ்ணன் கோயில் பிரதேசத்திற்கு மின்சாரம்



(யாழ்ப்பாணம்)

பொன்னாலை கிருஸ்ணன் கோயில் பிரதேசத்திற்கான மின்னிணைப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். பொன்னாலைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை இம் மின்னிணைப்பை ஆரம்பித்து வைத்தார்.

முன்னதாக நினைவுக்கல்லை அமைச்சர் திரைநீக்கம் செய்து வைத்ததுடன் உத்தியோகபூர்வமாக மின்னிணைப்பை வழங்கும் பொருட்டு மின்விளக்கையும் ஒளிரச்செய்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக 11 மில்லியன் ரூபா செலவில் இணைக்கப்பட்டுள்ள இம் மின்னிணைப்பின் ஊடாக அப்பகுதியிலுள்ள 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளன. இதில் அமைச்சர் உரை யாற்றும் போது மின்சாரம் மட்டுமன்றி இப்பகுதியில் மக்களுக்கான தேவைப்பாடுகள் பல இருக்கின்ற போதிலும் அவை படிப்படியாக தீர்த்து வைக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே பொன்னாலை சிறி வரதராஜப் பெருமாள் கோவிலின் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் சிறப்புப் பூசை வழிபாடுகளிலும் அமைச்சர் கலந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன், வடக்கின் வசந்தம் திட்டப் பணிப்பாளர் குணசீலன் வடக்கின் வசந்தம் யாழ்.மின்பொறியலாளர் விஜயசிறி, ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பெண்ணின் கண்களைக் கட்டி பேயோட்டிய பிக்கு கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாவேடிவேம்பு கிராமத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியரான குடும்பப் பெண்ணைக் கடத்தி, கண்களைக் கட்டி பேயோட்டினார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பௌத்த பிக்கு ஒருவரையும் அவரது துணையாட்கள மூவரையும் கைது செய்திருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் திறப்பகல், பொலனறுவை மாவட்டம் வெலிக்கந்தைப் பொலிஸ் பிரிவிலுள்ள விகாரை ஒன்றிலிருந்த வேளையில் கைது செய்யப்பட்டு, ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் ஒன்றில் கடமையாற்றும் மேற்படி பெண்ணைக் கடத்தி, வெலிக்கந்தையிலுள்ள விகாரைக்கு கொண்டு சென்ற பின்னர், அவரது கண்களைக் கட்டிய நிலையில் அவரை மரத்தில் கட்டி வைத்து பேயோட்டினர் என்று சம்பந்தப்பட்ட பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட பெண், கடந்த சனிக்கிழமை பகல் முச்சக்கர வண்டியொன்றில் கொண்டு வரப்பட்டு, வாழைச்சேனையில் இறக்கிவிடப்பட்டுள்ளார். அதன் பின்னர் அந்தப் பெண்ணே நேரடியாக ஏறாவூர் பொலிஸ் நிலையம் வந்து தனக்கு நடந்த கதி பற்றி முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேக நபர்களான பிக்குவும் அவரது துணையாட்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினார்.

தனக்குப் பேய் எதுவும் பிடித்திருக்கவில்லை என்றும் தான் பூரண சித்த சுவாதீனம் உடையவர் என்றும் கூறியுள்ள இப்பெண், குடும்பத் தகராறு காரணமாக கணவனிடமிருந்து விவாகரத்துக் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

# ரவி தமிழ் வாணனுடன் எழுத்தாளர் சந்திப்பு



தமிழகத்தைச் சேர்ந்த மணிமேகலைப் பிரசுரம், ரவி தமிழ வாணனுக்கும் வவுனியா பிரதேச எழுத்தாளர்களுக்குமான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமையன்று மாலை வவுனியா வைரவ புளியங்குளம் மதுரா மண்டபத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் கவிதை, கட்டுரை, சிறுகதை, குறும்படத் துறை சார்ந்த பல்வேறு படைப்பாளர்களும் பங்கு கொண்டனர்.

எழுத்து பணிப்பாளிகளின் எழுத்துக்களை நூலுருவாக்கம் செய்வதனை அடிப்படையாகக் கொண்ட சந்திப்பாகவே இச் சந்திப்பு அமைந்தமை குறிப்பிடத் தக்கது.

# போலி நாணயத் தாள்களுடன் கைது

(மட்டக்களப்பு)


வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி பகுதியில் இந்திய நாட்டின் போலி நாணயத்தாள்கள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஓட்டமாவடியில் உள்ள வர்த்தகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

இதன்போது இந்திய நாட்டு ஐநூறு ரூபா பெறுமதியில் தொன்னூற்றெட்டு தாள்கள் கைப்பற்றப்பட்டன.

# குடும்பத்தகராறு காதல் பிரச்சினை 7 மாத காலப்பகுதியில் வவுனியாவில் 18 தற்கொலைகள்

(வவுனியா)



வவுனியாவில் அண்மைக் காலமாக தற்கொலைகள் அதிகரித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட பகுதியில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31 வரையான ஏழு மாத காலப் பகுதியில் 14 ஆண்களும் 4 பெண்களும் ஆக 18 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

குடும்ப தகராறு, காதல் பிரச்சினை காரணமாகவே இந்த தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் இவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பருத்தித்துறைக்கு புதிய பொலிஸ் அதிகாரி



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பொலிஸ் தலைமைப் பீடத்திற்கு புதிய பிரதம பொலிஸ் அதிகாரியாக ரி.எஸ்.மீடின் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரியாக இதுவரைகாலமும் கடமையாற்றி வந்த மீடின், தற்போது, பருத்தித்துறைப் பொலிஸ் தலைமைப் பீட பிரதம பொலிஸ் அதிகாரியாக கடமையினைப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னர், பருத்தித்துறைப் பொலிஸ் தலைமைப் பீடத்திற்கு பிரதம பொலிஸ் அதிகாரியாக 2011 ஆம் ஆண்டு முதல் கடமையாற்றி வந்த ஏ.ஏ.டபிள்யு.ஜே.எஸ். அபயகோன், பொலிஸ் தலைமையகத்தினால் கடந்த வியாழக்கிழமை கண்டிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே புதிய அந்தப் பதவிக்கு மீடின் நியமிக்கப்பட்டுள்ளனார்.

24. கீழே தரப்பட்டுள்ள சம்பவங்களை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை.

A. இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றாள்.
B. மாலா சித்திரப் போட்டிக்குத் தெரிவானாள்.
C. ஆசிரியரின் வழிகாட்டலில் வரையத் தொடங்கினாள்.
D. அவளை எல்லோரும் பாராட்டினர்.
E. தொடர்ந்து விடா முயற்சியோடு வரைந்தாள்.

(1) A,B,C,D,E (2) B,D,E,A,C (3) B,C,E,A,D


25. பிள்ளைகள் பொது இடங்களில் நடமாடும் பொழுது பின்பற்றக்கூடாதது.

1) சூழலைத் துப்பரவாகப் பேணுதல்.
2) பரீட்சயமற்ற புதியபொருட்களை தூக்க முற்படல்.
3) எல்லோரையும் நம்பி ஏமாறுதல்.
4) தனது உடல், உடமைகளைக் கவனித்துக்கொள்ளல்.

26. ஆமை எதிரிகளிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள

1) உடலின் பருமனைக் கூட்டும்.
2) சிறிய ஒலிகளையும் கேட்கும்
3) கண்களை மூடிக்கொள்ளும்
4) ஓட்டினுள் புகுந்துகொள்ளும்.

➤ தரப்பட்ட உருக்களை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




27. இவ் உருக்களில் **உணவுக்குப்** பயன்படும் பொருட்கள் அடங்கிய விடை யாது?
(1) B,C,D (2) A,C,I (3) C,D.F

28. விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய விடை யாது?
(1) B,E,G (2) A,C,H (3) G,H,I

29. ஊர்வன அடங்கிய விடை யாது?
(1) H,I,G (2) A,D,E (3) D,F,H

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு




➤ கீழே தரப்பட்டுள்ள 1, 2 ஆம் வினாக்களில் எல்லாக் கருத்துக்களுடனும் மிகப் பொருந்துகின்ற உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


1. எல்லோரும் பயன்படுத்துவது, முதலாம்வகை நெம்புகோல், தேய்ந்துபோகக்கூடியது




1. பென்சில். 2. கணிப்பொறி 3. கத்தரிக்கோல்.


2. போக்குவரத்துச் சாதனம், மனிதசக்தி, வெளிநாட்டு உற்பத்தி



(1)



(2)


(3)

3. ஒளி, சூடு, இயற்கை


(1)


(2)


(3)

➤ 4, 5 ஆம் வினாக்களிலுள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம் பெறும் சொல் வரிசையின் கீழ் கோடிடுக.

4. (1) தண்ணீர், வெந்நீர், உவர்நீர், நீர்
(2) பயறு, உழுந்து, சோயா, கௌபி
(3) வெண்டி, கத்தரி, தக்காளி, மிளகாய்

5. (1) ஆடு, மாடு. நாய், பூனை
(2) நிறம், வெள்ளை, பச்சை, சிவப்பு
(3) றோசா, மல்லிகை, அந்தூரியம், செவ்வந்தி

➤ தரப்பட்ட தொடர்புகளுக்கு எண்களுக்குப் பதிலாக குறியீடுகள் காட்டப்பட்டுள்ளன. எல்லா உருக்களும் 10 இற்கு குறைவான எண் பெறுமானம் கொண்டவை. அவ் எண் பெறுமானத்தை அறிந்து 6, 7 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

☆ + ☆ = △

△ - ⊡ = ○

⊡ x ⊡ = ☆

6. தரப்பட்ட உருக்களை அவற்றின் பெறுமானத்திற்கேற்ப நிரைப்படுத்த வரும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(1) ⊡ ☆ ○ △ (2) △ ○ ☆ ⊡ (3) △ ⊡ ☆ ○


7. சரியான தொடர்பைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

(1) ⊡ - ☆ = ⊡ + ⊡

(2) △ + ⊡ = ○ + ☆

(3) ☆ ○ = ☆ △

8.



(1) (2) (3)


➤ 9ம், 10ம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட சொற்கள் இரண்டிற்கும் உள்ள தொடர்பை அவதானித்து அடுத்து வரும் சொல்லுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

9. உணவு - இரப்பை எனில், எரிபொருள் -
(1) பெற்றோல் (2) குளாய் (3) தாங்கி

10. மாதுளை – முத்து எனில், நெல் -
(1) பருப்பு (2) மணி (3) வித்து

➤ பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் நான்கு உருக்கள் தரப்பட்டுள்ளன. அதில் 3 ஏதோ ஒருவகையில் ஒத்தவை. வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

11.




(1) (2) (3) (4)

12.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| A | L | F | H |



13.



(1) (2) (3) (4)

➤ விலைப்பட்டியலை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| சீனி | 500 g | 32.00 |
| மா | 3 kg | 204.00 |
| கடலை | 750 g | 66.00 |
| வெங்காயம் | 1 kg | 60.00 |
| மண்ணெய் | 1 ℓ | 48.00 |
| பால் | 2 ℓ | 64.00 |

14. 250 g கடலையின் விலை என்ன?
(1) 44 (2) 32 (3) 22

15. 500 g மாவின் விலை என்ன?
(1) 68 (2) 34 (3) 62

16. ½ ℓ மண்ணெயினதும் ½ ℓ பாலினதும் விலை என்ன?
(1) 56 (2) 68 (3) 32

17. 1 kg வெங்காயத்தினதும், 500 g கடலையினதும் விலை என்ன?
(1) 114 (2) 100 (3) 104

➤ பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

18. எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் தாவர இலை
(1) இலுப்பை (2) கறுவா (3) வேம்பு

19. இலைகளைப் பொருத்தி தனது வதிவிடத்தை அமைத்துக் கொள்ளும் பிராணி எது?
(1) கொசு (2) முசுறு (3) கறையான்

20. குமார் அல்லும் பகலும் உழைத்தான். இதில் உள்ள அல்லும் பகலும் என்பது,
(1) அடுக்குமொழி (2) இரட்டைக் கிளவி (3) இணைமொழி

21. சிவப்பு நிறத்துடன் மஞ்சள் நிறத்தை கலக்கும் போது கிடைக்கும் நிறம்
(1) செம்மஞ்சள் (2) ஊதா (3) கறுப்பு

22. உடலின் சமநிலையைப் பேணக் கூடிய விளையாட்டு எது?
(1) அஞ்சல் ஓட்டம் (2) நீளம் பாய்தல் (3) செம்போட்டப் போட்டி

23. கீழே சில சம்பவங்கள் தரப்பட்டுள்ளன.
A. வாய்கால் முழுவதும் நீர் நிரம்பியிருந்தது.
B. ஊரெல்லாம் டெங்கு நோய் பரவியது.
C. இடி மின்னலுடன் மழை பெய்தது.
D. வாய்கால் நீரில் நுளம்பு பெருகியது.
கூறப்பட்ட சம்பவத்தை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை
(1) C,A,D,B (2) A,B,C,D (3) D,C,B,A

# முன்னாள் அதிபர் நினைவாக மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய முன்னாள் அதிபர் மறைந்த மணியம் கணபதிப்பிள்ளையின் 7ஆம் ஆண்டு நினைவினையொட்டி அவரிடம் கல்விகற்ற மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் மற்றும் 5 ஆம் தர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு ஆகியன நேற்று முன்தினம் சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இம் முகாமில் கண் மற்றும் பொது வைத்தியம் ஆகியவற்றுக்கான சிகிச்சைகளை யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் வழங்கியிருந்தார்கள். இதில் 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். 5ஆம் தர பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கருத்தரங்கில் 360 மாணவர்கள் பங்குபற்றியிருந்ததுடன், அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் கற்பிக்கும் பிரபல்யமான ஆசிரியர்கள் கருத்துரைகளை வழங்கினர்.

மேற்படி அதிபரின் நினைவாக இப்பாடசாலை வருடாவருடம் விளையாட்டு விழாவை நடாத்தி வந்தது. இம்முறை அதில் மாற்றங்கொண்டு வரப்பட்டு, மருத்துவ முகாம் மற்றும கருத்தரங்குகள் ஆகியன நடத்தப்பட்டன.

# தொண்டு நிறுவனம் வழங்கும் பணிகளை கூட மாகாண சபைகளால் முன்னெடுக்க முடியவில்லை

## பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு



அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களுக்கான பணிகளை முன்னெடுக்க மறுப்பதனால் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களின் சேவை இன்றும் மக்களுக்கு அவசியமாக உள்ளது. தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள ஆற்றும் பணிகளைக் கூட வடமாகாணசபை நிர்வாகத்தால் முன்னெடுக்க முடியாத நிலை தொடர்கின்றது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் நிறுவனத்தின் வழிகாட்டலுடன் வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடாத்திய மாபெரும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதிச் சுற்றும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் கடந்த 31 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் நிறுவனம் இக்கிராமத்தில் பல்வேறு வாழ்வாதார உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் யுவதிகளுக்கு கைப்பணிப் பயிற்சிகளை வழங்கி அவர்கள் தமது வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்கான பல பணிகளை மேற்கொண்டுள்ளது. மாதர் அமைப்புக்களூடாக பயிற்சி பெற்ற யுவதிகளால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியில் அவர்களின் அர்ப்பணிப்பை அறிய முடிகின்றது என்றார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேசசெயலர் ந.திரு லிங்கநாதன் சாந்தியகத்தின் செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.ஜோன், முன்னாள் கிராமசேவகர் அ.விமலேசன், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.நாகேஸ் வரன், சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் என்.திலீபன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வேட்புமனுத் தாக்கலின் போது சொத்து விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், தங்களின் சொத்து விவரங்களை வேட்பு மனுக்களுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரியுள்ளார்.

ஊவா மாகாண சபைக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும நடவடிக்கைகள் நாளையுடன் நிறைவடையுவுள்ளன. இந்த காலப்பகுதிக்குள் சொத்து விவரங்களும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வேட்பாளர்கள் தங்களின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையில் உள்ள பெயரை மாத்திரமே பயன்படுத்த முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைவதாக் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொளவதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதிலிருந்து இது வரையில் மொனராகலை மாவட்டத்திற்காக 5 சுயேச்சைக் குழுக்களும் பதுளை மாவட்டத்தில் ஒரு சுயேச்சைக் குழுவும் கட்டுப்பணம் செலுத்தியிருப்பதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

# சுகாதாரத்திற்கு பங்கம்

(சுன்னாகம்)

கோம்பயன் மணல் இந்து மயானத்தின் முன்பகுதியில் குறிப்பாக யாழ்.மானிப்பாய் பிரதான வீதியில் கடந்த சில நாட்களாக துர்நாற்றம் வீசுவதால் அவ் வீதி வழியாக பயணிக்கும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் மக்கள் பலர் இவ்வீதியூடாக பயணிக்கும் நிலையில் இவ்வாறு சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளால் தாம் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் குறிப்பாக இவ் வீதியூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள சுட்டிக்காட்டுகின்றனர். (66)

# இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வில் வடமாகாண சபை கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

கடந்த சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் ஆம்பமாகிய இந்நிகழ்விற்கு வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராசா, வடமாகாணசபை உறுப்பினர்களான ஆனோல்ட் கஜதீபன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்.

முன்னதாக அதிதிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு நாதஸ்வர இசை இசைக்க வரவேற்று அழைத்து வரப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து அரங்க நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு தொழிற்பயிற்சிகள் மற்றும் போட்டி நிகழ்வுகளில் விருதினைப் பெற்றவர்கள் வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் குருகுலராசா வடமாகாண சபை உறுப்பினர்களான ஆனோல்ட், கஜதீபன், சுகிர்தன் ஆகியோரினால், கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இந்நிகழ்வில் நடனம் பாட்டு உட்பட கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (பா)



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது இடம்பெற்ற இரத்ததான நிகழ்வைக் காணலாம். (51)

# அதிபர் கணேசதாசன் சேவையிலிருந்து ஓய்வு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் கணேசதாசன் தனது அறுபதாவது வயதில் அதிபர் சேவையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஓய்வுபெற்றார்.

இருபத்தைந்து வருட கால அரச சேவையில் சேவை யாற்றிய அவர் ஆசிரியராகவும் பத்து ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். கடந்த இரண்டரை ஆண்டுகளாக வலிகாமம் கல்வி வலயத்துக் குட்பட்ட பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் அதிபர் சேவையினை சிறப்பாக ஆற்றி ஓய்வு பெற்றுள்ளார். (66)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

பிறந்த ஆண்டு :- ..................................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

# சீனாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 400 பேர் பலி; 1400பேர் படுகாயம்





சீனாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 400 பேர் பரிதாபமாக பலியாகி உள்ள னர்,1,400 பேர் படுகாயம் அடைந் துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதி யான யுவான் மாகாணத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற் பட்டது. 'டோங் பகுதியில் ஏற் பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோளில் 6.5 ஆக பதிவாகியுள் ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டதும் தங் களது வீடுகள் மற்றும் அலுவ லகத்தைவிட்டு மக்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந் தனர். நிலநடுக்கத்தால் அந்த பகுதியில் தொலை தொடர்பு மற் றும் மின்சாரம் உள்ளிட்ட சேவை களும் துண்டிக்கப்பட்டன. பெருழ பாலான இடங்களில் தண்ணீர் குழாய்கள் உடைந்து வெள்ளப் பெருக்கும், நிலச்சரிவும் ஏற்பட் டுள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதி களில் மீட்புப்படையினர் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்ட னர்.

இந்த நிலநடுக்கத்துக்கு இதுவரை சுமார் 400 பேர் பலி யாகியுள்ளதாகவும், 1400இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் சீனாவின் சின்குவா செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் இடிபாடுகளுக்கிடையே பலர் சிக்கி இருப்பதால் பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. இதுவரை 180இற்கும் மேற்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர்.

காணாமற் போனவர்களைத் தேடும் பணியில் பேரிடர் மேலாண் மைக்குழு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

# வங்கியின் நேர்முகத்தேர்வில் சினிமாக் கேள்விகளால் பரபரப்பு

இந்தியாவிலுள்ள மத்திய ரிசர்வ் வங்கியின் அலுவலர் தேர் வில் கோச்சடையான் படத்தில் நடித்த நடிகர் பெயர் என்ன போன்ற கேள்விகள் கேட்கப்பட்டதற்கு கல்வியியலாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மத்திய ரிசர்வ் வங்கியின் உதவி அலுவலர் பணிக்காக நாடு முழுவதும் நடைபெற்ற தேர்வில், கணிதம், புத்தி கூர்மை, ஆங்கிலம், பொது அறிவு என நான்கு பிரிவுகளில் மொத்தம் 200 வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன.

அதில் பொது அறிவு பிரிவில், கோச்சடையான் பட்த்தில் நடித்த நடிகர்பெயர் என்ன என கேட்டு பதில் தெரிவுக்காக ரஜி னிகாந்த், அமிதாப்பச்சன், ஷாருக்கான், இவர்களில் எவரும் இல்லை என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

மேலும், மற்றொரு கேள்வியில் இந்தியில் வெளியான பாபி ஷாப் படத்தில் துப்பறியும் பாத்திரத்தில் நடித்த நடிகை பெயர் என்ன எனக் கேட்டு வித்யாபாலன், கரினா கபூர், பிரியங்கா சோப்ரா, இவர் களில் யாரும் இல்லை எனப் பதில் கள் பட்டியலில் கெடுக்கப்பட்டிருந் துள்ளன.இவ்வாறு பொது நேர் முகத்தேர்வில் சினிமா தொடர்பான கேள்விகள் கேட்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என கல்வியியலாளர்கள் தெரிவித் துள்ளனர்.

உலகச் செய்திகள்

# மோசமடையும் காஸாப் பகுதி உணவின்றி தவிக்கும் மக்கள்



வெளியே சென்று வந்தால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற நிலைக்கு உதாரணமாக இருக்கிறது பலஸ்தீனத்தின் காஸாப் பகுதி. இஸ்ரேல் இராணு வத்தின் தாக்குதல் உக்கிரம டைந்துள்ள நிலையில், காஸா மக்களிடையே பீதி அதிகரித் துள்ளது.

காஸா பகுதியை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக் கும் ஹமாஸ் இயக்கத்தினர் மீதும், அவர்களுடன் தொடர்பு டையவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருவதாகவும், இது இஸ்ரேலின் பாதுகாப்புக்கு மிக வும் முக்கியமானதொரு நட வடிக்கை என்றும் இஸ்ரேல் நியாயம் கற்பித்து வருகிறது.

இந்நிலையில் இத்தாக்கு தலால் படுகாயம் அடைந்த, 9,000 பேர் மற்றும் அக திகள் முகாம்களில் தங்க வைக்கப்பட் டுள்ள, 1.8 இலட்சம் பேருக்கு, போதிய உணவு மற்றும் மருத் துவ வசதிகள் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளதால், அவர்கள் நிலை மிக வும் மோசமாகி யுள்ளதாக, ஐ.நா., அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவம், ஜூலை 8 முதல், காஸாப் பகுதியில் விமானத் தாக்குதல் மற்றும் தரை வழி தாக்குதலை நடத்தி வரு கிறது.

காஸாப்பகுதியில் உள்ள பள ளிகள் மற்றும் சமூக கூடங்களில், கூட்டம் கூட்டமாக மக்கள புகுந் துள்ளனர். இதனால், அந்த பகுதி களில் சுகாதாரக். கேடு ஏற் பட்டு உள்ளது. நிரம்பி வழியும் மருத்துவமனைகளுடன், ஐ.நா., கட்டுப்பாட்டில் உள்ள, அல் - ஷீபா மருத்துவமனையியிலும் கொள்ளளவையும் தாண்டி ஆயிரக்கணக்கில், குண் டுவீச்சில் படுகாயம் அடைந்த வர்களும், பிற நோயாளிகளும் சேர்ந்துள்ளதால், மருந்து, உண வுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, போர்க்கள பாதிப்பை மருத்துவ மனைகள் பிரதி பலிக்கின்றன.

"எங்களால் முடிந்த அ வுக்கு, மருத்துவ உதவி மற்றும் உணவு வழங்கி வருகிறோம். இருப்பு உடனுக்குடன் தீர்ந்து விடுகிறது. கூடுதல் நிதி ஒதுக் குமாறு, ஐ.நா., சபையிடம் கேட் டுள்ளோம்" என, காஸாப் பகு தியில் உள்ள, ஐ.நா., அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

# மிகப் பெரிய கோவில் அமெரிக்காவில் திறப்பு



(வொஷிங்டன்)

உலகின் மிகப் பெரிய கோவில்களில் ஒன்றாக, அமெரிக்காவின நியூஜெர்சி மாகாணத்தில், 120 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட் டுள்ள சுவாமி நாராயண கோவில், இம்மாதம் 16இல், பக்தர்கள் தரிசனத்திற்காக திறக்கப்படுகிறது.

அமெரிக்காவில் அதிக இந்தியர்கள் வசிக்கும், நியூஜெர்சி மாகாணத்தின், ராபின்ஸ்வில்லி நகரில் இந்த கோவில் கட்டப்பட்டு வந்தது. மொத்தம், 134 அடி நீளம், 87 அடி அகலம் கொண்ட இந்தக கோவிலை, சுவாமி நாராயண சஸ்தா எனப்படும் அமைப்பு கட்டி யுள்ளது.

# இந்திய –நேபாள நட்புறவு மறுஆய்வு செய்யத் தயார்

## மோடி தெரிவிப்பு



இந்தியா- நேபாள நட்புறவு ஒப்பந்தம் 1950-ஐ மறு ஆய்வு செய்ய இந்தியா தயாராக இருப பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நேபாளத்திற்கு விஜயம் செய்த மோடி அங்கு நேபாள பிரதமர் சுஷில் கொய்ராலா அளித்த விருந்து நிகழ்ச்சியின் போது பேசியதாவது,

கடந்த 1950இல் போடப்பட்ட அந்த ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வது குறித்த உங்களது கருத்துக்களை தெரிவித்தால், அதன்படி அந்த ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்ய இந்தியா தயாராக உள்ளது. இதற்காக எனது கதவுகள் திறந்தே இருக் கும்.

நேபாளத்தை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல, அண்டை நாடு என்ற முறையில் அனைத்து உதவிகளையும் செய்ய இந்தியா தயாராக உள்ளது என்று மோடி பேசினார். அந்த ஒப்பந்தத்தின் சில பிரிவுகள் சிக்கலை ஏற்படுத்துவதாக உள்ள தெனக் கூறப்படுகிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேபாள அரசியலமைப்பு நிர்ணய சபையில் ஞாயிற்றுக் கிழமை ஆற்றிய உரையானது உறுப்பினர்களிடையே பரவ லான பாராட்டைப் பெற்றுள்ளது.

மோடியின் இரண்டு நேபா ளப் பயணத்தின் முதல் நாள், அந்நாட்டு அரசியலமைப்பு நிர் ணய சபையில் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினார். நேபாள மொழியில் அவர் பேச ஆரம்பித்தவுடனேயே உறுப் பினர்கள் கரவொலி எழுப்பித் தங்களது மகிழ்ச்சியை வெளிப படுத்தினர். கடனுதவி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை அவர் அறிவித்தார்.

# ஈராக் எண்ணெய் கிணறுகள் ஐ.எஸ்.ஐ.எஸ். வசமாயின

ஈராக்கின் வடக்கே அமைந்துள்ள 2 எண்ணெய் கிணறுகளை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கைப்பற்றினர் இதைத் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கும் குர்திஷ் அரசு இராணு வத்தினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.ஈராக்கில் ஷியா பிரிவு அரசுக்கு எதிராக சன்னி பிரிவு ஆதரவு பெற்ற ஐ.எஸ.ஐ.எஸ் தீவிரவாதிகள் கடந்த 2 மாதங்களாக தாக்குதல் நடாத்தி வருகின்றனர்

இந்நிலையில், அய்ன் ஜாலா மற்றும் பாத்மாவில் உள்ள, ஒரு நாளைக்கு 20 ஆயிரம் பேரல் எண்ணெய் உற்பத்தி செய்யும் 2 எண்ணெய்க் கிணறுகளை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றி உள்ளனர். அவற்றை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன், அவர்கள் கைப்பற்றிய ஒரு மின் உற்பத்தி நிலையத் தையும் ஜுமர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களையும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளிடம் இருந்து கைப்பற்றி விடுவோம் என்று குர்தீஷ் பிராந்திய அரசு உயர் அதிகாரி கயாத் சுர்சி கூறினார்.

# முதல்வருக்கு அவதூறு திரண்டது தமிழ் திரையுலகம்




தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் பற்றி இலங்கை இராணுவ இணையத்தளத்தில் அநாகரீக கருத்து வெளியிட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் திரையுலகினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் எதிரே தமிழ் திரையுலகினர் நேற்று ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் திரைப்பட நடிகர்கள், இயக்குநர் கள், தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தேசிய அருங்கலைகள் பேரவைக்கு இப்போதுதான் எழுச்சிக்காலம்

## அதன் தலைவர் சொல்கிறார்



(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது காலப்பகுதியிலேயே தேசிய அருங்கலைகள் பேரவை பல்வேறு வழிகளிலும் முன்னேற்றமும், வளர்ச்சியும் கண்டுள்ளது என தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்திகீர்த்திசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தின் காமினி திஸநாயக்க அரங்கில் நேற்று இடம்பெற்ற தேசிய அருங்கலைகள் பேரவையின் வளவாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1982 ஆம் ஆண்டு தேசிய வடிவமைப்பு நிலையம் நிறுவப்பட்டது. தற்போது அது மேலும் வளர்ச்சியடைந்து பல்வேறு பயிற்சி நிலையங்களையும் கொண்டுள்ளது.

இவ்வாறான பயிற்சி நிலையங்களில் தற்போது 149 பேர் ஆலோசகர்களாகவும் ஆசிரியர்களாகவும் விளங்கி வருகின்றனர்.

இன்றைய நிலையில் தேசிய அருங்கலைகள் பேரவை எதிர்கொண்டு வரும் பல்வேறு விதமான பிரச்சினைகள் நெருக்கடிகள் இடர்பாடுகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டுதலுக்கு அமைவாக தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பயிற்சிக் கூடங்களை சரியான முறையில் அனைவரும் பயன்படுத்தி அதனூடாக உரிய பயன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் உற்பத்தியாளர்களது உற்பத்திகளை சந்தைப்படுத்தல் காலத்துக்கேற்ற வகையில் நவீனப்படுத்தல் உள்ளிட்ட இடர்பாடுகளின் போது உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனைக்கு அமைவாக வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனைக்கூடங்கள் நிறுவப்பட்டுள்ள நிலையில் மேலும் விற்பனைக் கூடங்கள் நிறுவப்படவுள்ளன.

அந்தவகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக தேசிய அருங்கலைகள் பேரவை அவரது ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு அமைவாக பாரிய வளர்ச்சியும் முன்னேற்றமும் கண்டுள்ளது.

இதேபோன்று எதிர்காலத்திலும் அமைச்சரது தலைமையின் கீழ் மேலும் முன்னேற்றம் அடையும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதில் பிரதியமைச்சர் வீரகுமார திஸநாயக்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# ஷிராணியின் வங்கிக் கணக்கு விசாரணை செய்ய அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வங்கிக் கணக்குகளை விசாரணை செய்ய புலனாய்வுப் பிரிவினருக்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. என்.டி.பி. வங்கியின் தரவுத் தளத்திற்குள் பிரவேசித்து கணக்கு விபரங்கள் பற்றி ஆராய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தரவுத் தளத்திற்குள் பிரவேசித்து கணக்கு விபரங்களை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது எனவும் அதற்கு இடைக்கால தடையுத்தரவு ஒன்றை விதிக்குமாறும் என்.டி.பி வங்கி நீதிமன்றில் கோரியிருந்தது.

முன்னதாக கணக்கு விபரங்களை பரிசீலனை செய்வதற்கு உச்ச நீதிமன்றம் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியிருந்தது. எனினும், அந்த அனுமதிக்கு சவால் விடுக்கும் வகையில் உயர் நீதிமன்றில் என்.டி.பி. வங்கி தடையுத்தரவு ஒன்றை பெற்றுக்கொண்டிருந்தது. நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகவும், நீதிமன்றத் தீர்ப்புக்களில் தலையீடு செய்ததாகவும் குற்றம் சுமத்தி நாட்டின் முதலாவது பெண் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்க குற்றப் பிரேரணை ஒன்றின் மூலம் பணி நீக்கப்பட்டிருந்தார்.

## பார ஊர்தி தீக்கிரை வவுனியாவில் நாசவேலை

(வவுனியா)

வவுனியா, பண்டாரிக்குளம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிக்கு இனந்தெரியாத நபர்கள் தீ வைத்துள்ளனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் லொறி தீப்பற்றி எரிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, பண்டாரிகுளம் வீதியில் உள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த லொறிக்கே தீ வைக்கப்பட்டுள்ளது. வீதியால் பயணித்தவர்கள் இதனை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அங்கு சென்ற பொலிஸார் தீயை அணைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த லொறி கிளிநொச்சியைச் சேர்ந்தவருடையது என்று தெரியவந்துள்ளது. (70)

## அடிகாயங்களுடன்...

என்றும் வீட்டார் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சப்ரகமுவ...

அங்கிருந்து வெளியேறுமாறு கொச்சைத் தமிழில் கொலை அச்சுறுத்தல் விடுத்து கடந்த மாதம் 20ஆம் திகதி மாணவர்களின் கழிப்பறையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இதனையடுத்து அதேபோன்ற சுவரொட்டிகள் கடந்த ஞாயிறன்று மீண்டும் ஒட்டப்பட்டிருந்ததாகவும் அந்தக் கழிப்பறையில் வைத்தே மேற்படி மாணவன் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தையடுத்து, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு பல்கலைக்கழக நிர்வாகமும், பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு பிரதம...

எம்.ஏ.சுமந்திரன், இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது, பொதுச் சேவைகள் தொடர்பில் கட்டளையிடும் அதிகாரம் பொதுச் சேவை ஆணைக்குழுவையே சாரும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததாகக் குறிப்பிட்டார்.

தனது வேலையில் தலையிடுகிறார் எனவும் தன்னை வேலையிலிருந்து நீக்க முயற்சி செய்கிறார் எனவும் கூறி முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வடமாகாண முதலமைச்சரினால், வட மாகாண நிர்வாக நடைமுறைகள் தொடர்பான சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தனது உரித்துக்கள் பறிக்கப்படுவதாக அவர் அந்த மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த மனு கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முதலமைச்சரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் அன்று தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

இந்நிலையில், வடமாகாண முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோர் மாகாணத்தின் நல்லாட்சியை மனதில் கொண்டு ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கம் வழியாக, நட்புறவு ரீதியாக இணைந்து வேலைசெய்ய வேண்டுமென்று உயர் நீதிமன்றம் யூலை 14 ஆம் திகதி கோரியிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் எண்ணத்தை வடமாகாண நிர்வாகத்திடம் தெரிவிக்குமாறு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் வழக்குரைஞர்களிடம் அன்றையதினம் கேட்டிருந்தார். இதனை தத்தம் தரப்பினரிடம் பேசி அடுத்த தவணையின்போது ஒரு நட்பு ரீதியான தீர்வுடன் வருமாறும் பிரதம நீதியரசர், வழக்குரைஞர்களிடம் கேட்டிருந்தார்.

இந்நிலையில், சுற்றறிக்கையை விலக்கிக்கொள்வதாக முதலமைச்சர், சத்தியக்கடதாசி ஊடாக மன்றுக்கு அறிவித்துள்ளார் என்று அவர் சார்பில் ஆஜராகியிருந்த வழக்குரைஞர்கள் யூலை 14 ஆம் திகதி, மன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதனிடையே குறுக்கிட்ட மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், இந்த சுற்றறிக்கையை முறைப்படி வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்துரைத்த முதலமைச்சர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள், சத்தியக்கடதாசி மூலமாக வாபஸ் பெற்றுவிட்டோம் என்றனர்.

இதனையடுத்தே, இந்த மனுமீதான தீர்ப்பு கடந்த யூலை மாதம் 30 ஆம் திகதி வழக்கப்படும் என்று யூலை 28 ஆம் திகதி திங்கட்கிழமை, உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே மனுமீதான தீர்ப்பு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமையான நேற்று வழங்கப்படும் என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சடலத்தை...

தொடர்பில் மக்கள் தமது விசனத்தையும் தெரிவித்தனர்.

இப்பிரதேச பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளருக்கு தெரியப்படுத்திய நிலையில் தவிசாளர் சுடலைக் காப்பாளரை கண்டித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க தவிசாளரின் மருமகனிற்கே இந்த சுடலை காவலாளி நியமனம் அண்மையில் தவிசாளரால் வழங்கப்பட்டதாகவும், இவர் தனது கடமையை ஒழுங்கான முறையில் செய்யவில்லை எனவும் இப்பகுதி பொதுமக்கள் தமது மனக்குமுறலை வேதனையுடன் வெளிப்படுத்தினர்.

## தேவாலயத்துக்குள்...

இத்தேவாலயத்துக்குள் பலவந்தமாக நுழைந்த பிக்குகள், வெளிநாட்டு சக்திகளுடன் சேர்ந்து நாட்டுக்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபடவேண்டாம் என்று கூறி, அச்சுறுத்தியதாகவும் சத்தியவேல் கூறினார்.

இந்தக் கூட்டத்தின்போது, சட்ட விரோதமான செயல்கள் எதுவும் கூடியிருந்தவர்களால் செய்யப்படவில்லை என்று கூறிய அவர் பிக்குகளின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு பொலிஸார் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

இது சம்பந்தமாக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் புகாரொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## உள்நாட்டு...

பிரதிநிதிகளை அழைத்து ஏனைய விடயங்கள் குறித்து விவாதிக்கலாம் என்று புதுடில்லி அதிகாரிகள் கோடிட்டு காட்டியதாகவும், இதனால்தான் இன்னமும் கூட்டமைப்பு பிரதிநிதிகளை புதுடில்லியில் சந்திப்பதற்கான திகதியும் நேரமும் ஒதுக்கப்படவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களின் தீர்வுத்திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ள ஸ்திரத்தன்மையை கைவிடும்படி இந்திய அரசாங்கம் தம்மைக் கோரவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைவிட வேணடும் என இந்தியா வலியுறுத்தியுள்ளதாக வெளியாகிய செய்தி தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறோம். இன்னமும் உறுதிப்படுத்தப்பட்ட திகதியை இந்திய அரசு அறிவிக்காததால், புதுடில்லி செல்வது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிட முடியாமல் இருக்கின்றோம்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுப்பதாக வெளிவந்திருக்கும் செய்தி குறித்து எம்மால் எதனையும் கூறமுடியாதுள்ளது. எம்மிடம் உத்தியோகபூர்வமாக எதனையும் இந்தியா வற்புறுத்தவில்லை. உத்தியோகபூர்வமற்ற ஊகங்களுக்கு எம்மால் பதில் கூற முடியாது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான உயர்மட்டக் குழுவினரை சந்திக்கின்றபோது இவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுமானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சென்னைக்கு...

பாதுகாப்பு காரணங்களுக்காக தமிழக அரசு விடுத்த கோரிக்கை ஏற்றுத்தான், அவர்களை நாட்டுக்கு திரும்ப அனுப்பியுள்ளதாக இந்த விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து எழுதி வந்த கடிதங்களை விமர்சித்து இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த கட்டுரை தொடர்பாக, சென்னை, புதுடில்லி மற்றும் பெங்களூர் போன்ற இடங்களில் அ.இ.அ.தி.மு.க.வினர் பெருமளவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகிறது.

இந்தச் சூழலில் நேற்று தமிழ்நாடு கிரிக்கெட் சம்மேளனம் என்ற தனியார் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள இலங்கை வீரர்கள் சென்னை சென்றபோதே அவர்களுக்கு ஏற்பட்ட பாதுகாப்புக் கவலைகளால் திரும்ப அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

# அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பதா? தடுமாறுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் தொடர்ந்து நீடிப்பதா? எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதா என்பவை போன்ற விடயங்களில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை மட்டத்தில் தொடர்ந்து இழுபறியும் கருத்து வேறுபாடும் நீடிப்பது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியிருக்கின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த தலைவர்கள் இருவர். பகிரங்க நிகழ்வு ஒன்றில் அடுத்தடுத்து பேசியபோது இந்த முரண்பாடு அப்பட்டமாக வெளிப்பட்டது. ஒருவர் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், மற்றவர் எம்.பி.யான பசீர் சேகுதாவூத். மகிந்த ராஜபக்ஷ அரசில் இருவருமே மூத்த அமைச்சர்கள்.

நேற்று மாலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பசீர் சேகுதாவூத்தின் நாடாளுமன்ற உரைகள் அடங்கிய 'சோர்விலாச்சொல்' நூல் வெளியீடு இடம்பெற்றது. அந்நிகழ்வில் பிரதம விருந்திரனாகக் கலந்துகொண்டு அமைச்சர் ஹக்கீம் உரையாற்றினார்.

அவரது நீண்ட உரையை அடுத்து அமைச்சர் பசீர் சேகுதாவூத் தமது நூல் வெளியீடு தொடர்பான ஏற்புரையை நிகழ்த்தினார். அப்போதே அரசில் நீடிப்பது, இணக்க அரசியல் செய்வது, ஆளும் தரப்பை ஆதரிப்பது ஆகிய பிரதான விடயங்கள் தொடர்பில் இரு தலைவர்களும் முரண்பட்ட துருவப்பட்ட நிலையில் இருக்கின்றமை அப்பட்டமாக வெளிப்பட்டது. இரு தலைவர்களும் தத்தமது உரைகளில் அடுத்தவரை மெச்சிக் கொண்டனர் விதந்துரைத்தனர் பரஸ்பரம் பாராட்டுத் தெரிவிக்கவும் தவறவில்லை.

எனினும், அந்த நூல் வெளியீட்டுக்கு முதல் நாள் இரவு இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் தங்களுக்குள் கருத்து முரண்பட்டு தாங்கள் மோதிக்கொண்டமையைக் கோடி காட்டவும் அவர்கள் தவறவில்லை. அப்படி கருத்து முரண்பட்டு, விவாதித்து, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே தங்களின் சிறப்பு எனச் சூசகமாகச் சுட்டிக் காட்ட அவர்கள் முயன்ற போதிலும் அடிப்படைக் கருத்து நிலைப்பாட்டில் தங்களுக்குள் முரண்பாடு இருக்கின்றமையை தங்கள் உரைகளில் அவர்களால் மூடிமறைக்க முடியவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்கும் என்பதை ஹக்கீம் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், அதற்கு ஆறு மாத காலத்துக்கு மேல் நேரம் இருக்கின்றது.

அரசியலில் ஆறு மாதம் என்பது மிக நீண்டகாலம், அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்ற சாரப்பட ஹக்கீமின் உரை அமைந்தது. அப்போதும் என்ன முடிவு எடுப்பது என்பதை அவர் கோடி காட்டவில்லை. இன்றைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் மதில் மேல் பூனையாக இருக்க விரும்புகின்றது என்பதை பல்வேறு சொல்லாடல் மொழிகளில் அவர் சூசகமாகக் காட்ட முனைந்தார். சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்போம் என்ற சாரப்பட அவரின் உரை அமைந்தது. ஆனால், அமைச்சர் பசீர் சேகுதாவூத்தோ வெளிப்படையாகப் பேசினார். இணக்க அரசியலா, எதிர்ப்பு அரசியலா என்பதைத் தீர்க்கமாக, திட்டவட்டமாகத் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

எதிர்ப்பு அரசியல் என்றால், அது இந்த அரசுக்கு எதிர்ப்பு, எதிர்காலத்தில் வரக்கூடிய ஐ.தே.க. அரசுக்கும் எதிர்ப்பாக இருக்க வேண்டும் என்றார் அவர். அதை இப்போதே கூடித் தீர்மானியுங்கள். அரசை எதிர்ப்பதாயின் அதற்கு இதுவே தருணம். அப்படி இப்போது எதிர்ப்பைக் காட்டாமல் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கடைசி நேரத்தில் காலை வாருவதாக முடிவெடுப்பது சந்தர்ப்பவாத அரசியல் என்ற சாரப்பட அவரது உரை அமைந்தது.

அரசையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பதை ஆறுமாத காலம் கழித்து தேர்தல் வரும்போது பார்க்கலாம் என்கிறார் கட்சித் தலைவரான அமைச்சர் ஹக்கீம். இல்லை, எதிர்ப்பதானால், அதை இப்போதே முடிவெடுங்கள், தேர்தல் சமயத்தில் முடிவு எடுக்கும் சந்தர்ப்பவாத அரசியல் வேண்டாம் என்கிறார் அமைச்சர் பசீர் சேகுதாவூர்.

## ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் அலுவலகத்துக்கு பாதுகாப்பு

(புதுடில்லி)

திருச்சியிலுள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையின் ஆசனப் பதிவுக்காரியாலயத்துக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருச்சியிலுள்ள குறித்த அலுவலகத்தின் மீது கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உதவிப் பொலிஸ் அதிகாரி தலைமையிலான 9 பேர் அடங்கிய குழு குறித்த அலுவலகத்துக்கு முன்னால் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தொடர்பில் அவதூறான செய்தி வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு முன்னால் தமிழ் திரையுலகினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கு ஆரோக்கிய வாழ்வு கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு ஆரோக்கிய வாழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக்கழகம், யாழ் போதனா வைத்தியசாலையுடன் இணைந்து நடாத்திய இந்த நிகழ்வில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கு நீரிழிவு, கொலஸ்ட்ரோல் மற்றும் இரத்த பரிசோதனைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றுகையில், அலுவலகங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் கடமை புரிகின்றனர். தங்களின் உடல் நிலையை கவனிப்பதற்கு பிரத்தியேகமாக அவர்கள் நேரம் ஒதுக்கிக் கொள்வதில்லை. அதனால் நிச்சயமாக இவ்வாறான வைத்திய ஆலோசனைகள், பரிசோதனைகள் மாவட்ட செயலகத்தில் செயற்படுத்துவது சிறந்த விடயமாகும். மேலும் இவ்வாறான நிகழ்வுகள் ஆரோக்கியமான சமூக கட்டமைப்பிற்கு வழி வகுக்கும் எனத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் சிவச்சுதன், சிரேஷ்ட பதிவாளர் டாக்டர் பி.மயுதரன், டாக்டர் ஆர்.பரமேஸ்வரன், டாக்டர். கஜந்தினி, டாக்டர் சுசீலன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## வீதி விபத்தில் இருவர் பலி; கிழக்கில் நேற்று விபரீதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

அத்துடன் இந்த விபத்தில் படுகாயமடைந்த ஏறாவூரைச் சேர்ந்த எம்.பீர் என்பவர் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார். வீதியின் அருகில் மீன் விற்பனை செய்துகொண்டிருந்த ஒருவர் மீதும் அருகில் நின்று கொண்டிருந்த ஒருவர் மீதுமே வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று மோதியதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறுமுகத்தான் குடியிருப்பு காளி கோவில் வீதியைச் சேர்ந்த நாகமுத்து பாலகிருஷ்ணன் (வயது-54), ராசலிங்கம் ராஜேந்திரன் (வயது-27) ஆகியோரே விபத்தில் மரணமடைந்துள்ளனர்.

மேற்படி வாகனச் சாரதியை கைதுசெய்துள்ளதுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

## மருதங்கேணி பிரதேசம் பளை பொலிஸ் நிலையத்தின் கீழ்

### புதிய நடைமுறை அமுல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குட்பட்டதாக இதுவரை காலமும் இயங்கி வந்த மருதங்கேணி உப பொலிஸ் நிலையம், பளைப் பொலிஸ் நிலையத்தின் கீழ், இலங்கை பொலிஸ் திணைக்களத் தலைமையகத்தினால் மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த யூலை மாதம் தொடக்கம் இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் பளைப் பொலிஸ் நிலையத்தின் கீழ் இருந்த மருதங்கேணி உபபொலிஸ் நிலையம், நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

அதன்படி, மருதங்கேணிப் பிரதேசத்தின் நீதிமன்ற எல்லையும் பருத்தித்துறை நீதிமன்றமாகக் காணப்பட்டது.

இந்நிலையில், தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளமையினால் மருதங்கேணி உப பொலிஸ் நிலையத்திற்கு கீழ் வரும் பிரதேசங்களின் சிவில் நடவடிக்கைகள் பளைப் பொலிஸாரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

மருதங்கேணி உப பொலிஸ் நிலையத்திற்கு கீழிருந்த, செம்பியன்பற்று வடக்கு, செம்பியன் பற்று தெற்கு, பத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, நித்தியவெட்டை, கெவில் ஆகிய பிரதேசங்களின் பொலிஸ் நடவடிக்கைகள் இனிவருங்காலங்களில் பளைப் பொலிஸிற்கு உட்பட்டதாக அமையவுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதிமன்ற நடவடிக்கைகளும் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்டதாகவும் நடைபெறவுள்ளன.

யுத்தத்தின் பின்னர், பளைப் பொலிஸ் நிலையத்தின் கீழ், கிளாலி, எழுதுமட்டுவாள், முகமாலை, பளை, புலோபளை, புதுக்காடு, இயக்கச்சி, ஆனையிறவு ஆகிய பிரதேசங்கள் காணப்பட்டன.

அவற்றுடன், மருதங்கேணி உபபொலிஸ் நிலையத்திற்குட்பட்ட மேற்படி இடங்களும் இணைக்கின்றதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் மருதங்கேணிப் பிரதேசத்திலிருந்து கிளிநொச்சிக்குப் போக்குவரத்து வசதிகள் காணப்பட்டதாகவும், ஆனால் தற்போது போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தினால் நீதிமன்ற அலுவல்களை மேற்கொள்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக மருதங்கேணி உபபொலிஸ் பிரிவினைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஐ.நா. அகதிகள் சாசனம் முறைகேடாக பயன்படுகிறது

### ஆஸி.அமைச்சர் கண்டனம்

அகதிகள் சாசனத்தை பலரும் முறைகேடாக பயன்படுத்துவதாக அவுஸ்ரேலியா குற்றம் சுமத்தியுள்ளது அவுஸ்ரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் 1951 ஆம் ஆண்டின் அகதிகள் பிரகடனத்தில் இருந்து வெளியேறி சட்டவிரோத அகதிகளின் வருகையை கட்டுப்படுத்த மேல்நீதிமன்றத்தின் நடவடிக்கையை எதிர்ப்பார்ப்பதாக மொரிசன் குறிப்பிட்டுள்ளார். த ஒஸ்ரேலியன் பத்திரிகைக்கு செவ்வியளித்துள்ள அவர் இதன் மூலமே சட்டவிரோத அகதிகளைக் கட்டுப்படுத்தமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஏனைய நாடுகளில் இருந்து பொருளாதார ரீதியில் பலரும் அகதிகளாக அவுஸ்ரேலியாவுக்கு வருவதையும் தடுக்க முடியும் என்று மொரிசன் கூறியுள்ளார்.

157 இலங்கை அகதிகள் மாற்று உடை மாற்றுவதற்கு கூட அனுமதிக்கப்படவில்லை, அத்துடன் அரசியல் ரீதியாக அவுஸ்ரேலியா இந்தியாவுடன் உடன்படிக்கை செய்துக்கொண்டது போன்ற விடயங்களை அகதிகளின் சட்டத்தரணிகள் கண்டித்த நிலையிலேயே மொரிசனின் கருத்து வெளியாகியுள்ளது. அகதிகள் சாசனத்தை கடந்த 50 வருடங்களாக சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளமையால் அதில் இருந்து உடனடியாக அவுஸ்ரேலியாவால் வெளியேற முடியாத நிலை இருப்பதாகவும் மொரிசன் குறிப்பிட்டார்.

## மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று

(வவுனியா)

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று வவுனியா அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில், கடந்த காலத்தில் வவுனியா மாவட்டத் தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் அதற்கு செலவிடப்பட்ட நிதி விடயங்கள் மற்றும் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் மற்றும் மக்களின் தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராகலிங்கம், வடமாகாண அமைச்சர்களான வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், குருகுலராஜா, ஐங்கர நேசன், பா.டெனிஸ்வரன் உட்பட வடமாகாண அமைச்சர்கள் மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(70)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.